விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 15 வியாழக்கிழமை (28.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 40

## வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சரத் பொன்சேகா அமோக வெற்றி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் முடிபுகளின்படி ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் போட்டியிட்ட சரத் பொன்சேகா வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

பிரதான வேட்பாளர்களாக ஜெனரல் சரத் பொன்சேகா, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் போட்டியிட்டனர்.

இவர்களில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற வாக்குப் பதிவு முடிபுகளின்படி ஜெனரல் சரத் பொன்சேகா அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

## உடனடியாக பதவி விலகுவதற்கு தேர்தல் ஆணையாளர் விருப்பம்

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் மிகவும் வன்முறை மிக்க தேர்தலாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அமைந்துள்ளதால் தான் தொடர்ந்து பதவியில் இருப்பதில் அர்த்தமில்லை என தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலின் முடிபின் பின்னரும் நான் பதவியில் இருப்பதை விரும்பவில்லை. அரசியல் கட்சிகளினாலும், ஏனைய தரப்பினராலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அழுத் தங்களை (16ஆம் பக்கம் பார்க்க)

# 58 வீதமான வாக்குகளைப்பெற்று மகிந்த மீண்டும் ஜனாதிபதியானார்

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் ஆறாவது ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 58 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)



## அரச படைகள் ஆயுதங்களை பயன்படுத்தினால் போரிடுவது அல்லது சரணடைவதுதான் முடிபு

### ஜெனரல் சரத் பொன்சேகா திட்டவட்டம்

(கொழும்பு)

அரசாங்கம், படைகள் ஆயுதங்களை பயன்படுத்தினால், பதிலுக்கு நாம் போரிடுவது அல்லது சரணடைவது தான் எமது கடைசி முடிபு. இது தொடர்பில் நான் இறுதி நேரத்தில் முடிபு எடுப்பேன் என்று எதிர்க்கட்சிகளில் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிபடைந்த பின்னர் கருத்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மக்களின் எண்ணங்கள் ஈடேறவில்லை. இதனால் நான் பெரிதும் வருத்தமடைகின்றேன்; மிகவும் வேதனைப்படுகின்றேன். எதிர்காலத்தில் இம் மக்களின் விருப்பங்களை நான் நிறைவேற்ற முயற்சி செய்வேன் அதன் மூலம் இவர்களுக்கு நான் நல்லதொரு எதிர் காலத்தை பெற்றுக் கொடுப் பேன் என்றும் கூறினார்.

கடந்த வாரங்களில் என்ன என்ன நடந்தது என்பது பக்கச்சார்பற்ற அனைவருக்கும் தெரியும். என்ன செய்வது நடந்தது நடந்து முடிந்துவிட்டது. இனி நடக்கப் போவதைப்பார்ப்போம் என்றும்கூறினார். இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது,

நடைபெற்ற முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிபுகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடியாதவை. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியாக மகிந்த வருவதற்கு தமிழ் மக்கள் விரும்பவில்லை!

### த.தே.கூ.தலைவர் இரா.சம்பந்தன் பேட்டி

(கொழும்பு)

நடந்த முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக்குவதற்கு தாங்கள் தயாரில்லை என்பதை நிரூபிக்கும் நோக்குடனே வாக்களித்துள்ளனர். அது வெற்றி பெற்றுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதியிலிருந்து பொன்சேகா வாகனத்தில் வெளியேறினார்

(கொழும்பு)

தோதலில் போட்டியிட்ட எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா படையினரின் முற்றுகையிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக கொழும் புத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது அரசினால் சினமன் லேக் விடுதியில் தடுத்துவைக்கப்பட்ட ஜெனரல் சரத் பொன்சேகா விடுதியிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சற்றுமுன்னர் (16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை கைது செய்யும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா சினமன் லேக் சைட் ஹோட்டலில் படையிலிருந்து தப்பியோடியவர்களுடன் தங்கியிருந்ததாக குற்றஞ்சாட்டுகின்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார.

இவர்களை இனங்கண்டுநாம் வெளியேற்றியுள்ளோமே தவிர பொன்சேகாவை நாம் கைது செய்யவுமில்லை. (16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர் தலையீட்டால் ரணில் விக்கிரமசிங்க விடுதலை

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பட்டானிஸ் தலையிட்டு ரணில் விக்கிரமசிங்கவைத் தடுப்புக் காவலிலிருந்து விடுவித்துள்ளார் என பிந்திக் கிடைத்த செய்திகள்தெரிவிக்கின்றன.

இதேவேளை சிரச தொலைக்காட்சி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மங்கள சமரவீர மாத்தறையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ரூபவாஹினித் தொலைக்காட்சி நிறுவன ஊழியர்களுக்கு விடுமுறை அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவின் மகள் மற்றும் மனைவி (16ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முடிவுகள் தொடர்பில் அரசு அழுத்தம் செலுத்தவில்லை

## அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஆறாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்யும் நோக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பு முடிவுகள் தொடர்பில் அரசாங்கம் எவ்வித அழுத்தங்களையும் செலுத்தவில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் தேர்தல் செயலகத்தில் தங்கியிருந்து அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக வெளியான வதந்திகளில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் முடிபு வெளியீடு தொடர்பில் அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை எனவும், தேர்தல் செயலகம் சுதந்திரமான முறையில் முடிபுகளை அறிவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா சுதந்திரமாக இடம் நகர்வதற்கு எவ்வித தடைகளும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவை தண்டிப்பதற்கு எவ்வித தேவையும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒன்பது பேரை கைது செய்த விவகாரம் இராணுவத்தினரால் சுயாதீனமாக எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும், அதற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# தேர்தலின் பின்னரான வன்முறைகள் தென்னிலங்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

நடைபெற்ற முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெற்றி. பெற்றுள்ளதை தொடர்ந்து தென்னிலங்கையில் வன்முறைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தற்போதைய ஜனாதிபதி மீண்டும் வெற்றி பெற்றுள்ளதை தொடர்ந்து அங்கு வன்முறைகள் வெடித்துள்ளன. நாடுமுழுவதும் இதுவரையில் 15 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த சம்பவங்களில் பௌத்த துறவி ஒருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளனர். கம்பொல பகுதியில் நடைபெற்ற கைக்குண்டு தாக்குதலில் பௌத்த துறவி கொல்லப்பட்டுள்ளார்.

குருநாகல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டில் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

இரத்தினபுரி பகுதியில் 3 கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தேர்தலுக்கு பின்னரான வன்முறைகள் அதிகரித்து வருவதால் அதனை கட்டுப்படுத்த அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே தென்னிலங்கை முழுவதும் மிகப்பெரும் பதற்றமும், அச்சமும் சூழ்ந்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஹோட்டலில் உள்ள பொன்சேகாவின் சுதந்திர நடமாட்டத்திற்குத் தடை

## எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவின் சுதந்திர நடமாட்டத்தைத் தடுக்கும் வகையில் அரசாங்கம் படையினரை அவர் தங்கியிருக்கும் ஹோட்டலைச் சுற்றிக் கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்க நேற்று சரத் பொன்சேகா தங்கியிருந்த ஹோட்டலில் செய்தியாளர்களைச் சந்தித்த போது இக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளனர்.

இந் நிலையில் ஒரு ஜனாதிபதி வேட்பாளரின் நடமாட்ட சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதை விலக்கிக் கொள்ள வேண்டும் எனக் கோரி அரசாங்கத்திற்கு மனுவொன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அரசாங்கம் நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முறைகேட்டை மேற்கொண்டுள்ளது. அதனை வெளிப்படுத்தப்படும் என்ற அச்சத்தில் தன்னைக் கொலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவித்துள்ள சரத் பொன்சேகா, எனவே தாம் வீட்டில் தங்காது ஹோட்டலில் தங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# ஐ.தே.க. எம்.பி. காரியவசம் மீது சூடு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில வீராட்சி காரியவசம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருநாகல் மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் வீட்டில் இருந்தபோதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மூவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை குருநாகல் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-5)

# கம்பளையில் குண்டுத் தாக்குதல் பிக்கு உட்பட இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கம்பளை தொப்பிலிகலப் பிரதேசத்தில் நேற்று 27 ஆம் திகதி அதிகாலை வேளையில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

கம்பளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொப்பிலிகலவிலுள்ள பௌத்த விகாரையின் மீது வீசப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்த பௌத்த பிக்கு ஒருவரும் மேலும் ஒரு நபரும் உடனடியாக கம்பளை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அவ்விருவரும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளதாகக் கம்பளைப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளைக் கம்பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கம்பளை, நாவலப்பிட்டி, குருந்துவத்த ஆகிய பிரதேசங்களில் அசாதாரண நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் நேற்று நண்பகல் 12 மணி முதல் பொலிஸ் பிரிவுகளில் விசேட பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# க.பொ.த. சா/த பரீட்சைக்கான 2ஆம் கட்ட மதிப்பீட்டுப் பணி

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர்கல்லூரியில் நடை பெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை இரண்டாம் கட்ட மதிப் பீட்டு பணிக்கு நியமிக்கப்பட்ட பிரதம பரீட்ச கர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர், கணித பரீட்சகர் ஆகியோர் தமது வரவை 28ஆம் திகதி வியாழக்கிழமை காலை8.30-பிப4.00மணிக்கு இடையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேரடியாகவோ அல்லது 077 6914191 அல்லது 021 222 2346 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமோ உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதி அ.வேதநா யகம் அறிவித்துள்ளார்.

அத்தோடு பின்வரும் கணிதப் பரீட்சகர் களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவித் துள்ளார்.

வி.மணிவதனன் (கரவெட்டி), என்.சதீஸ்கரன் (கோப்பாய்), எஸ். தேவானந்தராசா (இருபாலை), திருமதி வி.தேவதர்சினி (மானிப்பாய்), திருமதி எஸ்.கோபா லகி ருஸ்ணன் (புத்தூர்), ரி.ஜெகதீஸ்வரன் (சுன்னாகம்), வி.கிருசாளினி (யாழ்ப்பாணம்), எஸ்.செந்தில்குமரன் (கொக்குவில்), கே.இரகுமார், என்.ஜெயதீபன் ,எஸ்.கணேசலிங்கம்,வி. சிவசக்திவேல், கே.தனஞ்சயன். (ச)

# முல்லைத்தீவு ஆசிரியர் சம்பளம் வவுனியாவில்

(யாழ்ப்பணாம்)

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்கள், வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் இயங்கும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனைக்குச் சமுகமளித்து தமது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ந)


வெற்றித் தேர்வு வந்துவிட்டது

2010 தரம்-4 தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்துவரும் இலங்கையின் முதற்தர வினாப்பத்திரம் வெற்றித் தேர்வு யாழ்ப்பாணம் வந்துவிட்டது.

தேவையான பாடசாலைகள் உடன் தொடர்பு கொள்க. ஏற்கனவே வினாப்பத்திரம் பெற்ற பாடசாலைகளும் உறுதிப்படுத்துக.

(இவ்வருடம் விசேட கழிவு உண்டு)

தொடர்புகளுக்கு:- 021 222 9016, 077 312 6807, 077 538 8471

இம் முறை வெற்றித் தேர்வு கடைகளில் விற்பனைக்கு வராது என்பதை கவனத்தில் கொள்க.

(C-4347)

வெற்றித் தேர்வு
மாவட்ட மட்டப் பரீட்சை
நல்லூர் சயன்ஸ் அக்கடமி

2010 தரம்-5 பாடசாலை வினாப்பத்திரங்கள் 20 உள்ளடங்கலாக விசேட வினாப்பத்திரங்கள் 15 உடன் மொத்தம் 35 மாதிரிப் பரீட்சைகள் மேலதிகமாக 20 பயிற்சி வினாப்பத்திரங்கள்.

2010 தரம்-4 பாடசாலை வினாப்பத்திரங்கள் 15 உள்ளடங்கலாக விசேட வினாப்பத்திரங்கள் 10 உடன் மொத்தம் 25 மாதிரிப் பரீட்சைகள் மேலதிகமாக 10 பயிற்சி வினாப்பத்திரங்கள்.

பிரதி ஞாயிறு தோறும், பொது விடுமுறை நாட்களிலும் பரீட்சைகள் நடைபெறும். விரும்பிய நேரத்தில் பரீட்சைக்கு தோற்றமுடியும்.

புள்ளிகளும், நிலைகளும் அறிந்து கொள்ளலாம். மாணவர்கள் உடன் பதிவு செய்யவும்.

தொடர்புகளுக்கு: 021 222 9016, 077 312 6807, 077 538 8471

அம்மா பகவான் சரணம்
சிறீ கல்கி மெடிக்கல் கிளினிக்
Reg-No-98.340C

உயர் இரத்த அழுத்தம், சலரோகம், ஆஸ்துமா, வாதங்கள் ஒற்றை தலைவலி போன்ற எவ்வகையான ரோகங்களிற்கும் அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு உண்டு.

தொடர்பு-Dr.சங்கர்

இல.80, ஆடியபாதம் வீதி, (ஸ்டேசன் வீதி), கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(யாழ் மருத்துவ பீடத்திற்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில், (ட்ரான்ஸ்போமர் அடி)

(513)



உலகப் பெருமஞ்சத் திருவிழா

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயிலில் தைப்பூச தினத்தன்று 30.01.2010 சனிக்கிழமை மஞ்சத்திருவிழா.

காலை விசேட அபிஷேக ஆராதனை இடம்பெற்று

மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 7.00 மணியளவில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட சரித்திரப் பிரசித்தி பெற்ற நூற்றாண்டு பழமை வாய்ந்த உலகப்பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதியுலாவரும் காட்சி இடம்பெறும்.

அனுசரணை:-
கணேசுஐயர்
பந்தல், முத்துமணவறை, பூமணவறை
பூமாலைகளைப் பெற்றிட (கண்ணன்)
புளியடி வைரவர் வீதி,
இணுவில்.

இணுவைக்
கந்தன் அடியவர்

(530)

# இன்று ஒரு தகவல்

## எது தகுதி?

ஓர் ஆட்சித் தலைவர் இருந்தார்.

அவருடைய தேசத்தில் மாநிலங்களை நிர்வாகம் செய்வதற்காக ஆளுநர்கள் இருந்தார்கள். ஒரு மாநிலத்தில் ஆளுநர் பதவி வெற்றிடமாக இருந்தது. அந்தப் பதவிக்கு இரண்டு பேரைப் பரிந்துரை செய்திருந்தார்கள்.

அவர்களிருவரில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்காக அவர்களை தன் வீட்டிற்கு வந்து சந்திக்குமாறு ஆட்சித் தலைவர் அழைத்திருந்தார்.

குறித்த நேரத்தில் ஒருத்தர் மட்டும் வந்து சேர்ந்தார். வணக்கம் சொல்லி அருகில் உட்கார்ந்தார். அன்பாகப் பேசினார்.

அவருடைய முகம் தெளிவாக இருந்தது. போட்டிருந்த உடையும் மிகவும் அழகாக சுத்தமாக இருந்தது.

அளவுக்கு அதிகமாக எந்த வார்த்தையையும் அவர் உபயோகிப்படுத்தவில்லை. அவர் எல்லா வகையிலும் ஒரு நல்ல தலைவராக இருப்பதாக அந்த ஆட்சித்தலைவர் உணர்ந்தார். அவர்களிருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இன்னொருவர் இன்னும் வந்து சேரவில்லை.

குறிப்பிட்ட நேரம் கடந்து விட்டது.

சிறிது நேரத்தில் அவசர அவசரமாக அவர் ஓடி வந்து சேர்ந்தார். வந்ததும் காலதாமதம் ஆனதுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டார். அப்படிக்கேட்டுக் கொண்டே தன்னுடைய உடையில் படிந்திருந்த புழுதியைக் கையால் தட்டி சுத்தப்படுத்திக் கொண்டார். அதன் பின் சொன்னார்:

தலைவரே! தாமதமாக வந்ததுக்கு என்னை மன்னிக்க வேண்டும். நான் முன்னாடியே புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன். வரும் வழியில் வயதான அம்மா ஒருத்தரைப் பார்த்தேன். அவருடைய கழுதையின் கால்கள் இரண்டும் பாறைகளுக்கு நடுவில் மாட்டிக் கொண்டிருந்தது. அதை வெளியே எடுப்பதற்கு அந்த அம்மா மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

அதைப்பார்த்த பின்னரும் என்னால் விட்டு விட்டு வரமுடியவில்லை. ஒரு வழியாக அதை மீட்டு அவர்களிடம் ஒப்படைத்து விட்டு வருவதற்குள் நேரமாகி விட்டது என்றார்.

இவர் சொன்னதை ஆட்சித் தலைவர் புன்னகையுடன் கவனித்துக்கொண்டிருந்தார்.

ஆனால் முதல் வந்து சேர்ந்தவர் வாய்விட்டுச் சிரிக்க ஆரம்பித்தார்.

அதன் பின் "உங்களுக்கு எது முக்கியம்? ஆளுநரின் பதவியா? கழுதையின் காலா? என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில்ஆட்சித் தலைவரின் குழந்தைகள் ஓடி வந்து மடியில் உட்கார்ந்து விளையாட ஆரம்பித்தனர். அவர் அந்தக் குழந்தைகளுக்கு அன்பாக முத்தம் கொடுத்தார்.

இதைப் பார்த்ததும் அந்த முதல் நபர் சொன்னார்.

"ஐயா... எனக்குப் பத்துக் குழந்தைகள். இப்படியெல்லாம் கிட்ட வரமாட்டார்கள். என்னைப் பார்த்தாலே பயந்து ஒதுங்கிப் போய்விடுவார்கள்"

"அப்படியானால் அவர்களுக்கு முத்தமே கொடுத்தது இல்லையா?"

"இல்லை"

இப்பொழுது அந்த ஆட்சித்தலைவர்,

"படைப்புக்கள் மீது கருணை காட்டாதவர் மீது படைப்பாளன் கருணை காட்டமாட்டான்" என்றார்.

அதற்கு அந்த இரண்டாவது நபர் சொன்னார்:

"ஐயா! எனக்கு ஐந்து குழந்தைகள். வீட்டுக்குப் போனால் எல்லோரும் என்மேல் வந்து விழுந்து விளையாடுவார்கள். என் உடை கசங்கியிருப்பதற்கு அதுவும் ஒரு காரணம்" என்றார்.

அழகான உடை, இனிமையான பேச்சு, பொலிவான தோற்றம் – இதனால் மட்டும் ஒருவர் தலைவராகி விடமுடியாது.

கருணை வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் வேண்டும்.

இந்தக் குணங்கள்தாமதமாக வந்த இரண்டாவது நபரிடம் இருப்பதை ஆட்சித் தலைவர் புரிந்து கொண்டார்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின் அந்த ஆட்சித் தலைவர் தமது செயலாளரைக் கூப்பிட்டு "இந்த இரண்டாவது நபருக்குப் பதவி நியமனக் கடிதத்தை அனுப்பி வையுங்கள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கையில் மனித வளத்தை முன்னேற்றவே பொது நிர்வாக அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது

## அமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு)

1970 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே இலங்கையில் பொது நிர்வாக அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு முன்னர் பொது நிர்வாகமும் நிதித்துறையும் ஒன்றாகவே செயற்பட்டன. திறைசேரியானது 1970களில் மாற்றம் செய்யப்பட்டதற்கான பிரதான காரணம் மனித வளங்களை முன்னேற்றுவதற்காகவே ஆகும் என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அண்மையில் மேற்படி அமைச்சின் மனித வள முகாமைத்துவ பிரிவின் உயரதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், அன்று திறைசேரி இயங்கியபோது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டது. தனியார் துறையின் மனித வளங்களை முன்னேற்றுவிப்பதில் புதிய புதிய அணுகுமுறைகளை கையாண்டதுடன் அவை பொது நிர்வாகத்துறையுடன் தொடர்புபடுத்தப்பட்டன.

முதன் முதலில் அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் துறையின் உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலமே இது சாத்தியப்பட்டது. மனித வள முகாமைத்துவம் இன்று எமது நாட்டில் நாளுக்கு நாள் வளர்ச்சி இலக்கினை அடைந்து வருகின்றது. எமது அமைச்சில் நான் எப்போதுமே முதலிடம் வழங்குவது மனித வளங்களுக்கே ஆகும்.

மனித வள முகாமையாளர்களாக நாம் அவர்களைத் தெரிவு செய்வது எப்படி எனில், உரிய பொருத்தமான பயிற்சியை வழங்குவதுடன் பயிற்சியின் பிற்பாடு பரீட்சையும் நடத்தப்பட்டு அதில் தேறும் தகுதியுடையோரே எமது அமைச்சில் மனித வள முகாமைத்துவப் பிரிவில் உள்வாங்கப்படுகின்றனர்.

உள்வாங்கப்படும் நபர்கள் முடிந்த வரை அவர் கள் ஓய்வூதியம் பெறும் வரையிலும் தொழில் வாய்ப்பைப் பெறுவர் என்பது இதன் சிறப்பம்சமாகும் என்றார். (2-6)

# அபிவிருத்தி அதிர்ஷ்டலாபச் சீட்டில் யாழ். வாசிக்கு இரண்டாம் பரிசு

அபிவிருத்தி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருக்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி இடம் பெற்ற இச்சீட்டிழுப்பிலேயே இவருக்கு பரிசு கிடைத்துள்ளது.

பரிசுத் தொகையாக 74 இலட்சத்து 11 ஆயிரம் ரூபா மேற்படி யாழ். வாசிக்கு வழங்கப்பட்டது.

மேலும் திருநெல்வேலியிலுள்ள ஒரு வர்த்தக நிலையத்திலேயே மேற்படி அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2)

## அராலிப் பகுதியில்

# கிராமியத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் நடவடிக்கை

(பொன்னாலை)

அராலி மத்தி – குமுக்கன்குளம் வீதி, அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலைக்குச் செல்லும் வீதிகளுக்கு கிராமியத் திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தற்போது மின் கிடங்குகள் வெட்டப்பட்டு மின் கம்பங்கள் நடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் சில வாரங்களில் வேலைகள் நிறைவு பெற்றதும் இப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் பணிகள் இடம்பெறும் என்றும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் குறித்த பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுவது கடந்த 50 வருட காலத்தில் இதுவே முதற் தடவை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (2-49)

# இராசி பலன்

28-01-2010

(தை 15, வியாழக்கிழமை)

திரயோதசி பிற்பகல் 5.21 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 4.39 மணி வரை

இராகுகாலம் 2.06 -3.36 மணி வரை

சுபநேரம் 8.06 - 9.36 மணி வரை

பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | மனோ தைரியம், எடுத்த காரியம் கைகூடும், நல்ல வரவேற்பு, உறவினர் வருகை. |
| இடபம் | போசன சுகக் குறைவு, மனோ சங்கடம், பித்தரோகம், அதிக செலவு. |
| மிதுனம் | வெகுமானம், கலந்துரையாடல் கௌரவக்குறைவு, போசன சுகம் |
| கடகம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, காரிய அலைச்சல், பிறருக்கு உதவி செய்தல். |
| சிங்கம் | தனகாரிய சேர்க்கை, நண்பர்கள் வருகை, குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும். |
| கன்னி | தொழிலில் ஆர்வம், நண்பர்கள் உதவி, அதிகாரம், புதிய தகவல். |
| துலாம் | உத்தியோக பங்கம், ஆரோக்கியக் குறைவு, திடீர் பயணம், தேவையற்ற பயம். |
| விருச்சிகம் | எதிர்பாராத அச்சம், தொழில் நன்மை, காரிய தாமதம், அஜீரணக் கோளாறு. |
| தனுசு | சென்ற இடத்தில் செல்வாக்கு, தேக நலன், பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |
| மகரம் | உடல் நலம், ஜனவசியம், அதிக பிரயாசை, காரிய அனுகூலம். |
| கும்பம் | பணக்குறைவு, காரிய இடையூறு, கௌரவக்குறைவு, புத்திரரால் கவலை. |
| மீனம் | தொழில் முன்னேற்றம், ரோக பயம், சுபசெலவு, மாதா சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 140 | 100 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 180 |
| தக்காளி | 120 | 140 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 35 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 160 | 120 | 100 |
| பூசணி | 30 | 40 | 50 |
| புடோல் | 80 | 90 | 60 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 80 |
| பாகற்காய் | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 150 | 160 | 140 |
| லீக்ஸ் | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 80 | 100 | 130 |
| கறிமிளகாய் | 120 | 140 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 110 | 90 |
| கத்தரி தம்புள்ள | 110 | 120 | 110 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

## சம்மாந்துறையில் வாக்களிப்பின்போது இரு கட்சிகளுக்கிடையே முறுகல் நிலை

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் தேர்தலன்று காலையில் வாக்களிப்பு மந்தகதியில் காணப்பட்டதாகவும் நண்பகலுக்குப் பின்னர் கல்முனை, அட்டாளைச்சேனை, இறக்காமம், சம்மாந்துறை ,பொத்துவில், நிந்தவூர் பிரதேசங்களில் வாக்களிப்பு மிக வேகமாக நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொத்துவில் ஜலால்புரம் அல்-பஹ்ரியா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் மக்கள் வாக்களிக்காத வண்ணம் சில தடைகள் ஏற்பட்டதால் இப்பகுதியில் இருகட்சி ஆதரவாளர்களுக்கிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.எனினும் பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் அவசர தலையீட்டினால் சுமுகநிலை ஏற்பட்டு மக்கள் வாக்களிக்க ஒழுங்கு செய்தனர்.

இதேபோல் இன்ஸ்பெக்டர் ஏற்றம் , ஊறணி பிரதேச வாக்களிப்பு நிலையங்களிலும் இந்தநிலை ஏற்பட்டு பாதுகாப்புத் தரப்பினர் இதனை சுமுகநிலைக்கு கொண்டு வந்தனர்.

அதுமட்டுமன்றி சம்மாந்துறையில் பல வெவ்வேறிடங்களில் இருகட்சித் தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்து சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் எம்.எம். மன்சூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

எது எவ்வாறாயினும் மாவட்டத்தில் பல பாகங்களிலும் வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றது. (2-6)

## பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய புதிய தொழில்நுட்பம் அவசியம்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

காலத்திற்கேற்ப புதிய புதிய தொழில்நுட்பக் கருவிகளை கண்டுபிடித்து அவற்றினை தொழில்துறைகளில் பிரயோகிப்பதனூடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மட்டத்தினை மேம்படுத்தலாம் இவ்வாறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அண்மையில் பேராதனையில் இடம்பெற்ற தொழில்நுட்பவியல் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரைநிகழ்த்துகையில், பழைய பாணியிலான தொழில்நுட்பக் கருவிகளின் பிரயோகங்களையே பின்பற்றுவதை விடுத்து நவீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பங்களை உபயோகிப்பது சாலச்சிறந்த விடயமாகும்.

இதுவிடயத்தில் கொரியா மற்றும் தாய்வான் ஆகிய நாடுகள் இப்போது இதனைப் பின்பற்றி வருகின்றதுடன் இந் நாடுகள் எமக்கு முன்னுதாரணமான நாடுகளாகவும் திகழ்கின்றன. கொரியாவில் உற்பத்தி செய்யப்படும் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் வாகனங்கள் போன்றன இப்போது பெரும்பாலும் இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்டு எமது மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பாரம்பரிய தொழில்நுட்பக் கருவிகளை விட நவீன தொழில்நுட்பக் கருவிகளின்



பிரயோகமே எமது நாட்டுக்கு பொருளாதார செழுமையையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தித் தரும் என்பதில் துளியளவேனும் ஐயமில்லை.

நவீன தொழில்நுட்ப கருவிகளின் பிரயோகத்தினை பயன்படுத்தும்போது எமது சுற்றுச் சூழலினையும் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகும். ஏனெனில் தொழில்நுட்பமானது சுற்றாடலுக்கு ஆபத்தினை விளைவிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். சிங்கப்பூர், மலேசியா, கொரியா, தாய்வான் போன்ற நாடுகள் தமது சுற்றாடலையும் கருத்திற் கொண்டே நவீன தொழில்நுட்பக் கருவிகளையும் உற்பத்தி செய்து வருகின்றன. நாமும் இதே முறைமையை பின்பற்றுவது அவசியமாகும்.

மேலும் பாடசாலை மட்டத்திலிருந்தே மாணவ, மாணவியருக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கருவிகள் குறித்த போதிய அறிவினையும் தெளிவினையும் வழங்கி வருவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

இந்நிலையை மேலும் விஸ்தரிக்க வேண்டியதும் அவசியமாகும் என்றார்.(2-6)

### டெங்கு நோய் பெருகும் இடமாக

## வவுனியாவில் இயங்கிவந்த கிளி. உப அலுவலக கட்டடம்

(கொழும்பு)

யுத்த காலத்தில் தற்காலிகமாக வவுனியா குருமண்காட்டுப் பகுதியில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் உப அலுவலகமாக இயங்கிவந்த கட்டடம் மாவட்ட நீதவானின் உத்தரவின்பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் அதிகரித்து வரும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்தபோது டெங்கு நுளம்பு பெருகும் இடமாக இக் கட்டடச் சூழல் காணப்பட்டமையாலும் நுளம்புப் பெருக்கத்தை அழிக்கத் தவறியமையாலும் இக் கட்டட உரிமையாளர் மீது பொது சுகாதாரப் பரிசோதகர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும் அவர் வழக்குகளுக்கு வரத் தவறியமையாலும் நுளம்பு பெருகும் இடத்தை கட்டுப்படுத்தத் தவறியமையாலும் அக் கட்டடத்தை சீல்வைக்குமாறு மாவட்ட நீதவான் உத்தரவிட்டுள்ளார். (2-6)

## நிறம் மாறும் விண்கற்கள் அதன் மர்மம் தான் என்ன?

### விஞ்ஞானிகள் ஆய்வு

பூமியானது விண்கற்கள் கடந்து செல்லும் போது அவற்றைக் குலுங்கச் செய்வதன் மூலம் அவற்றின் நிறத்தை மாற்றுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

விண்கற்கள் விண்வெளியிலுள்ள போது காணப்படும் நிறத்திற்கும் அவை பூமியில் விழும் போது இருக்கும் நிறத்திற்கும் வேறுபாடு காணப்படுவதற்கான மர்மத்திற்கு இந்தக் கண்டுபிடிப்பு தீர்வு தருவதாக் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

மஸாஸுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவகத்தின் கோள் மண்டல விஞ்ஞானப் பேராசிரியர் றிச்சட் பின்ஸெல் தலைமையிலான குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் “நேச்சர்” விஞ்ஞான ஆய்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி குழுவினர் கண்ணுக்கு புலப்படாத ஒளிக் கதிர்களை அவதானிக்கக் கூடிய அதி நவீன தொலைநோக்கியைப் பயன்படுத்தியே இந்த ஆய்வை மேற்கொண்டனர். (2-6)

## செயல்முறைப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வண்ணை – சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் செயல்முறைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இதில் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய போட்டிகள் உள்ளடங்குகின்றன.

இரு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் மத்திய பிரிவில் 10 தொடக்கம் 16 வயது வரையானோரும் மேற்பிரிவில் 17 வயதுக்கு மேற்பட்டோரும் பங்குபற்றலாம்.

இதற்கான விண்ணப்பமுடிவுத்திகதி எதிர்வரும் பெப்ரவரிமாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை எனவும் போட்டிக்குரிய பொருட்களை விண்ணப்பதாரிகளே கொண்டு வருதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு போட்டிக்கும் தனித் தனி விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும் எனவும் இதற்கான விண்ணப்பப் படிவங்களை சைவசமய அபிவிருத்திக் கழகம் அறிவகம் 82, நாவலர்வீதி , வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பரீட்சை செயலாளர் அறிவித்துள்ளார்.

போட்டிகள் யாவும் மார்ச் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை நடைபெறவுள்ளது.

மேலும் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கமும் 2ஆம் 3ஆம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (6)

## மயிர்கொட்டி பெருக்கம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பகுதியில் தற்பொழுது பெருகிவரும் மயிர்க்கொட்டிகளினால் வாழை, முருங்கை, பூவரசு போன்ற மரங்கள் தறிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-72)

## நவீன தொழில்நுட்பத்தின் மூலம் திண்மக் கழிவுகள் அகற்றல்

(பொன்னாலை)

சங்கானைப் பிரதேசத்தில் உள்ள கராச்சி மயானப் பகுதியில் கொட்டப்பட்டு வருகின்ற திண்மக்கழிவுகள் முழுமையான நவீன தொழில்நுட்பத்தின் மூலம் புதைக்கப்பட வுள்ளன.

இந்த வேலைத்திட்டத்திற்கு சங்கானைப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் , சனசமூக நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள்,கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியன ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக் கழிவுகளை முழுமையாக அகற்றிய பின் வேறு ஓர் இடத்தில் கழிவுகள் கொட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகமாணி தெரிவித்துள்ளார். (6-44)

## தொடரும் இந்தியர்கள் மீதான தாக்குதல்; அறிக்கை சமர்ப்பித்தது அவுஸ்திரேலியா

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் இந்தியர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வரும் நிலையில், அது தொடர்பான குற்றப் பின்னணி தகவல்கள் அடங்கிய அறிக்கையை இந்தியாவிடம் அவுஸ்திரேலியா சமர்ப்பித்துள்ளது.

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

விக்டோரியா பொலிஸார் தயாரித்த இந்த அறிக்கை கடந்த வாரம் இந்தியாவிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக அவுஸ்திரேலியாவில் இருந்து வெளிவரும் “ தி ஏஜ்” நாளிதழில் கூறப்பட்டுள்ளது.

எனினும், தாக்கப்பட்ட இந்தியர்களிடம் இருந்து பொருட்கள் எதுவும் கொள்ளையடிக்கப்படவில்லை என்பதால் இத்தகைய சம்பவங்கள் இனப் பாகுபாடு காரணமாகவே நடைபெறுகின்றன என்று டில்லியில் சமீபத்தில் தன்னை சந்தித்த அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சரிடம் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா சுட்டிக் காட்டியதாக தகவல்கள் வெளியாகியதை அடுத்தே இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (2-6)

## கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த பாலகன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)


அயல்வீட்டுக் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்த பாலகன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் நாயன்மார்க்கட்டு நல்லூரைச் சேர்ந்த சுதாகர் சுவீந்திரன் (வயது 4) என்பவரே மரணமானார்.

குறித்தத பாலகன் அயல்வீட்டுக்கு சென்றிருந்த வேளையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ள்தாகவும் வீட்டுக்காரர்கள் தேநீர் கொடுப்பதற்கு கூப்பிட்ட வேளை காணாமற் போனதையடுத்து தேடிப்பார்த்த போது கிணற்றில் சடலமாக இருப்பதைக் கண்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-30)



# இலங்கை அரசியலில் இந்தியாவின் தலையீடு

02




சீக்கியம் நாட்டின் அமைப்பு

**இலங்கையில் இந்தியாவின் தலையீடு தொடர்பில் கண்டியில் இடம்பெற்ற பகிரங்க உரையில் சோமவன்ச அமரசிங்க மற்றும் டில்வின் சில்வா ஆகியோரால் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் கருத்துக்கள் தொடராக பிரசுரமாகின்றது.**

உலக மயமாக்கலுக்குள் அமைதியான சகவாழ்வை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. சமூக நிலையை பொருட்படுத்தாமல், வேற்று சமூக முறைகள்நிலவும் நாடுகளோடு உறவுகள் பேணப்படுகின்றன. அன்று சூ என் லாயைப் போன்றவர்கள் இவ்வாறான நிலைமையை எதிர்பார்த்துத்தான் தூரநோக்கோடு கொள்கைகளைத் தயாரித்தார்கள். ஏற்றுக் கொண்ட அந்தக் கொள்கை இன்று மீறப்பட்டுள்ளன. ஜவஹர்லால் நேரு அவர்களின் கொள்கையிலுள்ள முட்டாள்தனமான செயல்கள் போன்றவை. நான் மேற்குறிப்பிட்ட நூலிலே எழுதப்பட்டுள்ளன. இந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்ட, பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக்கொண்ட, அண்டைநாடுகள் மீதான ஆக்கிரமிப்பை ஒதுக்கித் தள்ளிய இந்தியா, சீனாவோடு மோதியது. இந்து -சீன யுத்தத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த யுத்தத்தில் இந்தியா நல்லதொரு படிப்பினையைப் படித்துப் பெற்றது.

1950 களிலிருந்து நாம் ஆரம்பித்தால், எமக்குத் தெரியம் "சீக்கியம்" என்றொரு நாடிருந்தது. அது ஒரு தனியான சுதந்திர நாடு. இந்தப் பிராந்தியத்தில் , நேபாளத்துக்கு அருகில், இமய மலையின் தென்பகுதியில் அந்த நாடு அமைந்திருந்தது. என்ன நடந்தது? சீக்கியம் என்ற அந்த நாடு எங்கே? "சீக்கியம்" என்ற அந்த சுதந்திர நாட்டை இந்தியா கபளீகரம் செய்துவிட்டது. இன்று சீக்கியம் என்றொரு நாடே இல்லை! இன்று இருப்பது சீக்கியம் மாநிலம். அது இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கிறது. இவ்வாறு தான் இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை செயல்பட்டது. அன்று சீக்கியம் இந்தியாவின் மாநிலமாக்கப் பட்டதைப் போன்றே, சுதந்திரத்துக்கு முன்னர், இந்தியா சுதந்திரமடைவதற்கும் முன்னர் இலங்கை சுதந்திரமடைவதற்கும் முன்னர் பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டது. எமது தேசிய சங்கத்தின் தலைவர்களாலும் சுதந்திர இயக்கத்தின் தலைவர்களாலும், இந்தியத் தலைவர்களாலும் அந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இலங்கையும் இந்தியாவின் ஒரு மாநிலமாக வேண்டுமென்பதே அந்தப் பிரேரணை. அதிர்ஷ்டவசமாக சிலர் அதனை எதிர்த்தனர். டீ.எஸ். சேனநாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்க, சி.டபிள்யூ.கன்னங் கரா ஆகியோர் அந்தப் பிரேரணையை எதிர்த்தனர். அதனால் அம்முயற்சி தோல்வியடைந்தது. இலங்கை இந்தியாவின் ஒரு மாநிலமாவதை இங்குள்ள சிலர் விரும்பினர். அவ்வாறு நடந்திருந்தால் இன்று நாம் இந்தியாவின் ஒரு மாநிலத்தில் துன்பப் படும் மக்களைப் பற்றித்தான் பேச வேண்டியிருந்திருக்கும். முன்னேற்றமடையாத மாநிலத்தைப் பற்றிப் பேச நேர்ந்திருக்கும்.

இந்தியாவில் முன்னேற்றமிருக்கிறது. ஒரு பகுதியில் அதாவது ஒரு பிரிவுக்கான முன்னேற்றம், நகர மயமாக்கல். இந்தியாவையும் இலங்கையையும் ஒப்பிட்டு நோக்கும் போது பல விடயாங் களில், கல்வி விடயத்தில், வேறு பல விட யாங்களில் நாம் உயர்ந்த இடத்தில் இருக்கின்றோம். ஜப்பானியர் இலங்கையில் குண்டுபோட்ட தோடு எல்லாமே குழம்பிவிட்டது.

இலங் கையை இந்தியாவின் ஒரு மாநிலமாக்குவது உள்ளிட்ட அனைத்தும் குழம்பிவிட்டன. எனவே, நாம் இறைமையுள்ள நாடு என்ற வகையில், தனிநாடு என்ற வகையில், எமது நாட் டுக்கு உலகில் நற்பெயரும் நல்ல பிமான மும் இருக்கிறது. நாம் பெற்றுக் கொண்ட நல்லபிமானத்தையும், நற்பெயரையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். நாம் பெற்றுக் கொண்ட நல்லபிமானத் துக்கு இன்று சவால் விடுக்கப்படுகிறது.

1962 இல் ஜவஹர்லால் நேரு காலமான பின்னர் திரு லால்பகதூர் சாஸ்திர பிரதமராகப் பதவி ஏற்றார். எனினும் வெளியுறவுக்கொள்கையில் மாற்றம் ஏற்படவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நடந்தது. திருமதி சிறிமாவோ பண்டார நாயக்க அம்மையார் திரு லால் பகதூர் சாஸ்திரியோடு பேச்சுவார்த்தை நடத்தினார். இலங்கை பெருந்தோட்டப் பகுதி மக்கள் தொடர்பாக நடந்த அந்தப் பேச்சுக்களின் மூலம் உடன்பாடொன்றுக்கு வர முடிந்தது.

எனினும் இந்தியாவின் அதிகார வர்க்கம் அதற்கு இடமளிக்க வில்லை. இந்தியாவின் அதிகாரவர்க்கம் மிகவும் பலம்வாய்ந்த, அகங்காரம் பிடித்த பழமைவாத அதிகார வர்க்கம் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த அதிகார வர்க்கம் இந்திய வெளியுறவுக் கொள் கையை எவ்வாறு வழி நடத்துகிறது என் பதைப் பற்றி, இந்தியாவின் கொள்கை இலங் கையில் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றி பின்னர் பேசுவோம். அன்றிலிருந்து இன்றுவரை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளை இந்திய அதிகார வர்க்கமே தயாரிக்கிறது. வெளியுறவுக் கொள்கை அரசியல்வாதிகளாலேயே தயாரிக்கப்படவேண்டும். ஆனால் வெளியுறவுக் கொள்கைகளை அதிகாரிகளே தயாரிக்கின்றனர். அந்த வெளியுறவுக் கொள்கைகளை அவர் களே அமுல் படுத்தவும் செய்கின்றனர். அதனால் இந்தியா என்பது அரசியல்வாதி களை அதிகார வர்க்கம் அடிபணிய வைத்திருக்கும் இடம்.




தெற்காசியாவில் இந்தியாவும் ஏனைய நாடுகளும்

அதிகார வர்க்கத்துக்கு தேவையானவாறே இந்தியா வழிநடத்தப்படுகிறது. அந்த அதிகார வர்க்கம் பாரம்பரிய, பழமைவாத, நேர்மையில்லாத. வர்க்கம். விசேடமாக, இந்தப் பிராந்தியத்திலுள்ள



நாடுகள் தமக்கு அடிபணிந்த நாடுகளே என்ற எண்ணம் இந்திய அதிகார இயக்கத்திடம் இருக்கிறது.

இனி, அவர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் பழைமைவாத விடயங்களும் இருக்கின்றன. அவைகள் ஹிந்து வேதத்தின் ஊடாக அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும் அல்லது வரலாற்றிலிருந்து கிடைத்திருக்க வேண்டும்.

இல்லாத ஒன்றை நிலை நிறுத்துவதற்காக அதிகார வர்க்கம் முயற்சிக்கிறது. சாம்ராஜ்ஜியமாக இந்தியாவை மாற்ற கனவு காணும் சிலர் இந்தியாவில் இருக்கின்றனர். அவர்களுக் கேற்ப அது ஒரு விசாலமான இந்தியா. அந்த சாம் ராஜ்ஜியமென்பது ஆப்கானிஸ்தானின் கந்தஹாரிலிருந்து மியன்மார் வரையும் (பர்மா), அடுத்து வடக்கு இமாலயத்துக்கு அப்பாலிருந்தும் நேபாளத்தின் வட எல்லையிலிருந்தும் தெற்கின் இலங்கை வரையிலும் ஓர் அகண்ட சாம்ராஜ்யம். மாலைதீவுகளைப் பற்றி நாம் கதைக்க வேண்டியதில்லை. அதன் பலம் எமக்கு தெரியும்.

இந்த சாம்ராஜ்ஜியத்தை மீண் டும் நிலை நாட்ட வேண்டிய தேவை அந்த அதிகார இயக்கத்துக்கு இருக்கிறது. அவர்கள் விடயத்தில் நாம் ஒன்றை ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்திய அதிகார இயக்கத்துக்கு போதிக்கும் இட மொன்று இருக்கிறது.

நிர்வாகிகளுக்குப் போதிக்கும் இடமொன்று இருக்கிறது. அவர்களைத் தயார்ப்படுத்தும் இடமொ ன்று இருக்கிறது. அதுதான் ஸ்ரீ ஜவகர் ஹலால் நேரு பல்கலைக்கழகம். அந்தப்பல்கலைக் கழகத்தில் இந்தியாவுக்கு தேவையான தேசப்பற்றுமிக்க அதிகாரி கள் உருவாக்கப்படுகின்றனர். ஆனால் ஒரு தவறு நடக்கிறது.

அதுதான் தேசப் பற்றை தவறாகப் புரியவைப்பது. ஆதிக் கத்தை விஸ்தரிக்கும் கருவியாகவே அவர்கள் தேசப்பற்றைக் கருதுகின்றனர். இன்று, இந்தப் பிராந்தியம் தொடர்பாக ஆதிக்கப் பேராசை பிடிக்குமானால், அதிலிருந்து தான் எமக்கும் இந்தியாவுக்குமிடையில் பிரச்சினைகள் ஆரம்பிக்கும்.

**சோமவன்ச அமரசிங்க**
தலைவர், மக்கள் விடுதலை முன்னணி

அந்த ஆதிக்கத்தை இப்போது நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். (என்றுமில்லாதவாறு 1980 க்குப் பின்னர்)

தெற்காசியாவை எடுத்துக்கொண்டால், திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களின் காலத்தில் ஏற்கனவே கூறிய உடன்பாட்டுக்கு வரமுடிந்தது. அந்தப் பேச்சு வார்த்தையை சீர்குலைக்க சிலர் நட வடிக்கை எடுத்தமையால், பேச்சுக் களை இடைநிறுத்த வேண்டிய நிலை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்க ளுக்கு ஏற்பட்டது. (தொடரும்)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் " அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்", " பன்னிரு திருமுறைப் பாராயணம்" என்பன நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் நாயன்மார்க்கட்டு குளத்தடி அருள்மிகு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து இடம் பெறவுள்ளது.

ஆலய பரிபாலகர்களின் அனுசரணையுடன் இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளதாக அகில இலங்கை திருமுறை மன்ற தலைவர் சி.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (6-2-4)

### நீர்வேலியில்

## ஸ்ரீ அம்மா பகவான் கூட்டுப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் ஸ்ரீ அம்மா பகவான் ஆன்மீக கூட்டுப் பிரார்த்தனை மைய அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தினர் கலந்துகொண்டு பக்தர்களுக்கு வரதீட்சை மாலைகளை வழங்கினர். மேலும் இங்கு வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிரார்த்தனை நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

### யாழ். செய்திகள்

## புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சேவா லங்கா நிறுவனத்தின் புதிய கட்டடத் தொகுதி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு சேவா லங்கா நிறுவனத்தின் தலைவர், டாக்டர் ஹர்ஷா குமார நவரத்தின தலைமையில் இல 54/2, பலாலி வீதி, கோண்டாவில் என்னும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக ஜேர்மன் தன்னார்வ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜோசிம் சுவார்ஸ், யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் தலைமை கள அலுவலர் செல்வி ஈற்றா சுவேற், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## உழவர் விழாவும் தைப்பூச பொங்கலும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பூவேந்தர் பகல் பராமரிப்பு நிலையத்தின் உழவர் விழாவும் தைப்பூச பொங்கலும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெற்றோர்களுக்கிடையிலான தாலாட்டுப் போட்டியும் நடைபெறவுள்ளதாக பகல் பராமரிப்பு நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (4-29)

## பயிற்சிப் பட்டறை

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயத்தில் க.பொ.த. சாதாரண தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தினை கற்கும் மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நாடகமும் அரங்கியலும் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-29)

# வலிகாமம் மேற்குப் பகுதியில் டெங்கு விழிப்புணர்வு பிரசாரம்

வலிகாமம் மேற்குப் பகுதியில் பலர் டெங்கு நோய்க்குட்பட்டதைத் தொடர்ந்து இது பற்றிய விழிப்புணர்வு பிரசாரம் பல்வேறு வகைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதில் வீட்டையும் சுற்றாடலையும் துப்புரவாக வைத்திருக்குமாறும் சிரட்டை, பழைய தகரங்கள், மூடப்படாத ரின்கள் போன்றவற்றை வெட்டிப் புதைத்து விடுமாறும் நோய் அறிகுறி காணப்படுமிடத்து அண்மையில் உள்ள வைத்தியசாலையில் உடனடியாக சிகிச்சை மேற்கொண்டு பரிசோதனை செய்யுமாறும் ஒலிபெருக்கிகள் மூலம் பிரதேச சபையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் இதுசம்பந்தமான இறுவட்டு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இது சங்கானை, சண்டிலிப்பாய், மானிப்பாய் பகுதியில் இயங்கிவரும் தனியார் கேபிள் தொலைக்காட்சி உரிமையாளர்களிடம் விநியோகிக்கப்பட்டு விளம்பர நேரத்தில் அடிக்கடி இவ் இறுவட்டில் உள்ள காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

அதில் டெங்கு பரவும் விதம், டெங்கின் அறிகுறி, நோய் பாதிப்புக்குள்ளானோர் செய்ய வேண்டிய அவசர சிகிச்சை பற்றிய விளக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளன. (2-49)

# வீதியை திருத்தி தருமாறு — மக்கள் கோரிக்கை —

(பொன்னாலை)

அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை முன்பாகவுள்ள வீரபத்திரர் ஆலயத்துக்குச் செல்லும் வீதி கடந்த 40 வருடங்களாக புனரமைக்கப்படாமல் இருந்து வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், கட்டடத் தொழிலாளர்கள், பொதுமக்கள் என தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்தி வரும் முக்கிய வீதிகளில் ஒன்றாக இருந்துவரும் இவ் வீதியானது நீண்டகாலமாக புனரமைப்புச் செய்யப்படாததால் குன்றும் குழியுமாக இருந்து வருவதாகவும் கவலை வெளியிடப்படுகிறது.

வலி.மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இவ் வீதியின் முக்கியத்துவம் உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (6-49)

# சமூக பாதுகாப்பு நிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது

வலி. தென்மேற்கு பிரதேச சண்டிலிப்பாய் செயலகத்தில் சமூகப் பாதுகாப்பு நிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

தற்போது இக் கட்டடத்தில் சமூக சேவைப் பகுதி அலுவலகம் உதவிப் பிரதேச செயலர் அலுவலகம் என்பவற்றோடு கீழ்மாடியிலும் மேல்மாடியிலும் சிறுவர் பாதுகாப்பு அலுவலகம் இயங்கி வருகின்றது. (2-49)

### காரைநகரில்

# மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகள்

(காரைநகர்)

காரைநகர் -பொன்னாலை வீதியின் சோதனைச் சாவடியில் மீண்டும் சோதனை நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் நுழைவாயிலான பொன்னாலைச் சந்தியில் கடந்த பதினெட்டு வருடங்களிற்குப் பின்னர் ஈழத்துச் சிதம்பர இரதோற்சவ தினமான 31.12.2009 அன்று சோதனை நடவடிக்கைகள் முற்றாக நிறுவப்பட்டிருந்தன.

ஆனால் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலிற்கு மறுநாளான இன்றுமீண்டும் புன்னாலைச் சந்தி சோதனைச் சாவடியில் விசாரணைகள் மற்றும் அடையாள அட்டை பரிசோதனை என்பன நடைபெற்று வருகின்றதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (2)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி கிழக்கு கோப்பாய் பிரிவினர் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை காலை 10.30 மணிக்கு உரும்பிராய் கிழக்கு சென்மைக்கல் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவின் உரும்பிராய் சென்மைக்கல் அலகு தொண்டர்களில் நாற்பதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கவுள்ளதாக மேற்படி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-134)

## வன்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தப்படும் விக்ரம் ராஜன் கங்கு ஞாபகார்த்த வன்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் எதிர் யாழ். ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன மோதவுள்ளன.

இப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடத்தப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

### பருத்தித்துறையில்

## விசேட தோல் சிகிச்சை கிளினிக்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் லண்டனிலிருந்து வருகை தந்துள்ள தோல் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.இரவீந்திரனால் நடத்தப்படும் விசேட தோல் சிகிச்சை கிளினிக் எதிர்வரும் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட நோயாளர்கள் இதில் பங்குபற்றி பயனடையுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (2-4)

## அருள்நந்தி முன்பள்ளி அங்குரார்ப்பண வைபவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தோப்பு அருள்நந்தி வித்தியாலயத்தில் அருள்நந்தி முன்பள்ளி அங்குரார்ப்பண வைபவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு தோப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பாடசாலை அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு மேற்படி பாடசாலை சமூகத்தினர் கேட்டுள்ளனர். (2-4)

## டெங்கு விழிப்புணர்வு பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியில் டெங்கு விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

வல்வெட்டித்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தயாமோகன் தலைமையில் வல்வெட்டித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை பொலிஸ் திணைக்களம் ஆகியனவும் இணைந்து இப்பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டன. (6)




லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் யாழ்ப்பாண கணனிப்பயிற்சி நிலையத்தில் யாழ். கணனிப் பயிற்சி நிலையம் மற்றும் சாவகச்சேரி கணனிப் பயிற்சி நிலையங்களுக்கு கணனிகள் அன்பளிப்புச் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. இதில் ஆலய நிர்வாக சபையின் பிரதிநிதி கலாநிதி அப்பையா தேவசகாயம் யாழ். கணனிப் பயிற்சி நிலைய முகாமையாளரிடம் கணனிகளைக் கையளிப்பதையும், அருகில் திருமதி தேவசகாயம் மற்றும் முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ரூ.71 இலட்சம் செலவில் இலங்கை அகதிகள் முகாம்கள் சீரமைப்பு

குமரி மாவட்டத்தில் ரூபா 71 இலட்சம் செலவில் இலங்கை அகதிகள் முகாம்களை சீரமைக்கும் பணி தொடங்கியது.

இலங்கையில் போர் ஏற்பட்டதைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு வந்தனர். அவர்களுக்காக பல இடங்களில் முகாம்கள் அமைக்கப்பட்டன.

குமரி மாவட்டத்தில் பெருமாள்புரம், பழவிளை, ஞாரான்விளை, கோழிப்போர் விளை ஆகிய 4 இடங்களில் அகதிகள் முகாம் ஏற்படுத்தப்பட்டது. தற்போது அந்தப் பகுதிகளில் நூற்றுக்கணக்கானோர் வசித்து வருகின்றனர்.

அங்கு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர். அவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் முதல்வர் கருணாநிதி நிதி ஒதுக்கீடு செய்தார். அதன்படி குமரிமாவட்டத்தில் உள்ள 4 முகாம்களில் அடிப்படைவசதிகள் செய்ய ரூபா 71 இலட்சத்து 31ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பெருமாள்புரம் முகாமில் ரூபா 38 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் பணிகள் நடைபெறவுள்ளன. அதில் ரூ. 12 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் 136 வீடுகளின் மேற்கூரை ஓடுகளைப்பிரித்து புது ஓடுகள் அமைக்கும் பணி, தரை அமைக்கும் பணி நேற்று முன்தினம் தொடங்கியது.

மேலும் ரூபா 5 இலட்சம் செலவில் சாக்கடை, கழிப்பறை வசதியும் ரூபா 11 இலட்சம் செலவில் குடிநீர் வசதியும், ரூபா 11 இலட்சத்தில் அகதிகள் வசிக்கும் அரசுக்கு சொந்தமான குடியிருப்பை சீரமைக்கும் பணியும் நடைபெறவுள்ளது.

பழவளை அகதிகள் முகாமில் ரூபா 5 இலட்சத்து 95 ஆயிரம் செலவிலும், ஞாரான் விளை மற்றும் கோழிப்போர்விளை அகதிகள் முகாமில் ரூபா 26 இலட்சம் செலவிலும் சீரமைப்புப்பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை பொதுப் பணித்துறையினர் செய்து வருகின்றனர். (6)

# பெல்ஜியம் தம்பதிக்கு தத்துக் கொடுக்கப்பட்ட பெண் 28 ஆண்டுகளுக்குப் பின் தாயுடன் இணைந்தார்

(சென்னை)

பெல்ஜியம் தம்பதியினருக்கு 28 ஆண்டுகளுக்கு முன் தத்துக்கொடுக்கப்பட்ட தமிழகப் பெண் மீண்டும் சென்னைவந்து தனது தாயைக் கண்டுபிடித்து அவரோடு சேர்ந்தார்.

பெல்ஜியத்தைச் சேர்ந்த மாரீஸ் , மேட்லின் தம்பதியினரின் வளர்ப்பு மகள் எஸ்தர்



(33) . இவர் தனது தோழி டெல்பின்னுடன் கடந்த ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி தமிழகத்திற்கு சுற்றுலா வந்தார். சென்னை சேப்பாக்கம் வாலாஜா சாலையில் ஸ்ரேயன்ஸ் பவுண்டேஷனின் பாவனேஷ் தியோராவை சந்தித்தனர். இருவரும் தங்குவதற்கு தேவையான உதவிகளை செய்த தியோரா அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அப்போது எஸ்தர் நான் பெல்ஜியம் மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்தார்.

இது குறித்து தியோரா விசாரித்த போது தமிழகத்தில் பிறந்த நான் பெல்ஜியம் தம்பதியினருக்கு தத்துக்கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார். அப்போது தனது சிறு வயதில் கடற்கரையில் குடிசை அருகே வெளிநாட்டு பெண்ணுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் காண்பித்தார். சிறு வயதில் சென்னை அடையாறில் வசித்ததாக எஸ்தர் கூறினார்.

இதையடுத்து எஸ்தரின் பெற்றோரைத் தேடி தியோரா அடையாறு சென்று விசாரித்தார். அங்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் சென்னை பெரம்பூரில் குழந்தைகள் காப்பகம் நடத்தி வரும் பாதிரியாரை தியோரா சந்தித்து எஸ்தரின் பெற்றோர் குறித்து விசாரித்தார்.

அப்போது எஸ்தரின் தாய் அம்பத்தூர் திருமுல்லை வாயலில் இருப்பது தெரிந்தது. இதையடுத்து கடந்த டிசம்பர் மாதம் 22ஆம் திகதி இரவு 8 மணிக்கு எஸ்தர் தனது தாய் சுசீலாவை சென்னை மெரீனா கடற்கரையில் சந்தித்தார்.

இது குறித்து தியோரா கூறும் போது ஐதராபாத்தில் உள்ள செல்லுலார் மற்றும் மாலிக்குலர் பயாலஜி எஸ்தர் சுசீலா இருவருக்கும் டி.என்.ஏ. சோதனை நடத்தப்பட்டது. அதில் எஸ்தரின் தாய் சுசீலா தான் என்பது உறுதியானது என்றார்.

தன் தாயைக் கண்ட பின் எஸ்தர் கூறியதாவது, பாவனேஷ் தியோரா உதவியுடன் என் தாயாரை கண்டுபிடித்து மகிழ்ச்சியாக உள் ளது. இனி அதிகமாக சம்பாதித்து அடிக்கடி சென்னை வந்து எனது தாயாரையும் அக் காவையும் சந்தித்து விட்டு செல்ல முயற் சிப்பேன் என்றார். எஸ்தருக்கு தமிழ் மொழி தெரியவில்லை. பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் மட்டுமே பேசினார். (2-6)




# உலகின் மோசமான விமான நிலையங்கள்; அமெரிக்க பத்திரிகை தெரிவிப்பு

உலகிலேயே மிக மோசமான விமான நிலையங்கள் என்ற பட்டியலில் முதல் 5 இடத்தை டெல்லி , மும்பை, சென்னை விமான நிலையங்கள் பெற்றுள்ளன.

விமானங்கள் குறித்த நேரத்துக்கு வந்து சேருதல் மற்றும் சரியான நேரத்துக்கு புறப்பட்டு செல்லுதல் அடிப்படையில் விமான நிலையங்களின் செயற்பாடுகள் தரம் நிர்ணயிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் மிக அதிகமான விமானங்கள் தாமதமாகப் புறப்படும் மற்றும் வந்து சேரும் மோசமான விமான நிலையங்கள் பட்டியலை அமெரிக்காவைச் சேர்ந்த போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் சீன தலைநகர் பீஜிங்கில் உள்ள விமான நிலையம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அங்கு 62 சதவீத விமானங்கள் தாமதமாக புறப்படுவதாகவும் சரியான நேரத்திற்கு வருவதில்லை என்றும் ஆய்வறிக்கை கூறுகிறது. அதாவது பீஜிங் விமானநிலையத்தில் 38 சதவீத விமானங்கள் மட்டுமே சரியான நேரத்திற்கு வருகின்றன, புறப்பட்டுச் செல்கின்றன.

இந்தப் பட்டியலில் இரண்டாம் இடத்தை டெல்லி விமான நிலையம் பிடித்துள்ளது. அங்கு 45 சதவீத விமானங்கள் மட்டுமே சரியான நேரத்தில் புறப்படுகின்றன. மூன்றாவது இடத்தை பிடித்துள்ள மும்பை விமான நிலையத்தில் இருந்து 56 சதவீத விமானங்கள் மட்டுமே சரியான நேரத்தில் புறப்பட்டுச் செல்கின்றன.

இதில் 4 ஆவது இடத்தை பிடித்திருப்பது சென்னை விமான நிலையம். இங்கு 63.9 சதவீத விமானங்கள் மட்டுமே சரியான நேரத்திற்கு வருவதாக போர்ப்ஸ் தெரிவிக்கிறது.

மிகச் சிறப்பாக செயற்படும் விமான நிலையம் என்ற அந்தஸ்தை ஜப்பனில் உள்ள ஓசாகா இடாமி விமான நிலையம் பிடித்துள்ளது. இங்கு 94 சதவீத விமானங்கள் சரியான நேரத்திற்கு வருகின்றன, புறப்பட்டுச் செல்கின்றன. இதற்கு அடுத்த இடத்தில் தென் கொரியாவின் சியோல் விமான நிலைய விமானம் உள்ளது. இங்கு 91 சதவீத விமானங்கள் சரியான நேரத்தில் புறப்பட்டுச் செல்கின்றன. (6)

# பத்மஸ்ரீ விருதை நிராகரித்த கவிஞர்

இந்தியாவின் கௌரவமான விருதுகளான, பத்ம விருதுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. மொத்தம் 130 பேருக்கு இவ்விருதுகள் அறிவிக்கப்பட்டன.

பிரபல இந்திக் கவிஞர் ஆச்சார்ய ஜானகி வல்லப் சாஸ்திரி (80)க்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டது. இந்தியில் பிரபலமான எழுத்தாளரான சாஸ்திரி கவிஞராக மட்டுமல்லாமல் கதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள், கஜல் பாடல்கள் , பாடல்கள் உள்ளிட்டவற்றை எழுதியுள்ளார்.

ஆனால் அவர் இவ்விருதை வாங்க மறுத்துள்ளார்.

கடந்த 1994ஆம் ஆண்டே எனக்கு பத்மஸ்ரீ விருது அளிப்பதாக முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அதை நிராகரித்து விட்டேன்.

இந்த வயதில் எனது கடைசிக்கால கட்டத்தில் பத்மஸ்ரீ விருது கொடுப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. அந்தக் கால கட்டத்தை நான் தாண்டி வந்துவிட்டேன். இப்போது அதை எனக்குக் கொடுப்பதை நான் நிராகரிக்கிறேன்.

எனது சிஷ்யர்களுக்கும் இளம் தலைமுறையினருக்கும் தான் இந்த விருது பொருத்தமானதாக இருக்கும் என்று கூறியுள்ளார். (2-6)

## தமிழகத்தில்

# மரபணு கத்தரிக்காய்க்கு தற்காலிக தடை விதிப்பு

(சென்னை)

மரபணு மாற்றுக் கத்திரிக்காய் குறித்து அரசு முடிவெடுக்கும்வரை, அதை விற்கவோ,



பயிரிடவோ அனுமதிக்கக்கூடாது என தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முதல்வர் கருணாநிதியை அவரது வீட்டில், பூவுலகின் நண்பர்கள் என்ற அமைப்பு, தமிழ்நாடு இயற்கை விவசாயிகள் சங்கம், பாதுகாப் பான உணவுக்கான கூட்டமைப்பு, பெண்கள் இணைப்புக்குழு ஆகிய வற்றின் நிர்வாகிகள் சந்தித்து மரபணு மாற்றுக் கத்தரிக்காயை தமிழகத்தில் அனுமதிக்கக்கூடாது எனக் கேட்டுக்கொண்டனர். முதல் வர் கருணாநிதி, அது பற்றி அரசு அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக் காது என்று தெரிவித்தார்.

மேலும் எந்தவொரு அதிகாரியும் தமிழக அரசு முடிவெடுக்கும் வரை, இதை விற்கவோ, பயிரி டவோ அனுமதிக்கக் கூடாது என்று கூறியிருப்பதாக அவர்களிடம் தெரிவித்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இந்தியாவில் கடல் விவசாயத்தை மேற்கொள்ள மத்திய அரசு திட்டம்

(இராமநாதபுரம்)

உலக மீன் சந்தையில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியை சமாளிக்க இந்தியாவிடம் கடல் விவசாயத்தை மேற்கொள்ள மத்திய அரசு முடிபு செய்துள்ளது. மூன்று பக்கமும் கடலால் சூழ்ந்த தீபகற்ப இந்தியா உலக பிரசித்தி பெற்ற கடல்களை கொண்டுள்ளது. இருந்தும் கடல் விவசாயத்தில் ஆரம்ப நிலையில் இருப்பதால் உலக மீன் சந்தை தொடர்ந்து வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. 2008-2009இல் உலகளாவிய மீன் விற்பனை ஐந்து இலட்சம் கோடி ரூபாய். இதில் அதிக மீன்பிடி தொழில் கொண்ட இந்தியாவின் பங்கு வெறும் ஒன்பது ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே .

அதே நேரத்தில் மிகச் சிறிய நாடுகளான தாய்லாந்தில் 20 ஆயிரம் கோடி ரூபாய், வியட்நாம் 15 ஆயிரம் கோடி ரூபாய் அந்நிய செலாவணியை ஈட்டியுள்ளது. இந்தியாவில் கடல் விவசாயம் இல்லாமல் போனதே இந்த வேறுபாட்டிற்கு காரணமாகும். விலை தீர்மானிக்கும் முறையை கூட இங்குள்ள மீனவர்கள் பெறாமல் உள்ளனர். பல மீனவக் கிராமங்களில் மீன்பிடிக்கான அடிப்படை வசதியே இல்லை. அப்படியிருக்கும் போது அங்கு கடல் விவசாயம் செய்வது எப்படி?

இது போன்ற பல கேள்விகள் மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ளன.

இந்நிலையை போக்க கடல் விவசாயத்தை இந்தியா முழுவதும் அறிமுகம் செய்து மீன்பிடித் தொழிலின் அன்னிய செலாவணியை பெருக்கத் தேவையான நடவடிக்கைகளை, மேற்கொள்ளுமாறு கடல் மற்றும் மீன் சார்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இதற்கான தனிக் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ள நிலையில் பல கோடி ரூபாய் மதிப்பீடு தயாராகி வருகிறது.

இதற்கமைய முதற்கட்டமாக தமிழகத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ள இம் முயற்சி படிப்படியாக கேரளா, குஜராத் உட்பட இந்தியாவின் பல பகுதிகளுக்கும் விரிவு செய்யப்படவுள்ளன. குளிரூட்டி பதப்படுத்தும் கருவி, நவீன மீன்பிடித் தளம் போன்ற அத்தியாவசியத் தேவைகள் இந்த கடல் விவசாயம் மூலம் நிறைவேற்றப்படும்.

எனினும் மேலும் தமிழகத்தில் இராமநாதபுரம், கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் இதற்கான ஆய்வுகளும் நடந்து வருகின்றதாகவும் இதற்காக வெளிநாடுகளிலிருந்து பயிற்சியாளர்கள் இந்தியா வரவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

### திருகோணமலை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 69 751 | 43.06 |
| சரத் பொன்சேகா | 87 586 | 54.06 |
| ஏனையவர்கள் | 4658 | 2.88 |
| செல்லுபடியான வாக்குகள் | 1061 985 | 98.52 |
| நிராகரிக்கப்பட்டவை | 2429 | 1.48 |
| வாக்களிக்கப்பட்டவை | 1064 414 | 68.18 |
| பதிவு செய்யப்பட்டவை | 2041 133 | |

### யாழ். மாவட்டம் (கிளிநொச்சி)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 991 | 15.78 |
| சரத் பொன்சேகா | 4717 | 75 |
| ஏனையவர்கள் | 572 | 9.11 |
| செல்லுபடியான வாக்குகள் | 6280 | 95.64 |
| நிராகரிக்கப்பட்டவை | 286 | 4.36 |
| வாக்களிக்கப்பட்டவை | 6566 | 7.23 |
| பதிவு செய்யப்பட்டவை | 90 811 | |

### யாழ். மாவட்டம் (கோப்பாய்)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 4538 | 22.13 |
| சரத் பொன்சேகா | 13 151 | 64.13 |
| ஏனையவர்கள் | 2819 | 13.74 |
| செல்லுபடியான வாக்குகள் | 20 508 | 97.04 |
| நிராகரிக்கப்பட்டவை | 625 | 2.96 |
| வாக்களிக்கப்பட்டவை | 21 133 | 32.12 |
| பதிவு செய்யப்பட்டவை | 65 798 | |

### யாழ் மாவட்டம் (வட்டுக்கோட்டை)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 4247 | 22.73 |
| சரத் பொன்சேகா | 11 712 | 62.68 |
| ஏனையவர்கள் | 2725 | 14.59 |
| செல்லுபடியான வாக்குகள் | 18 684 | 96.13 |
| நிராகரிக்கப்பட்டவை | 752 | 3.87 |
| வாக்களிக்கப்பட்டவை | 19 436 | 30.37 |
| பதிவு செய்யப்பட்டவை | 63 991 | |

### யாழ் மாவட்டம் (சாவகச்சேரி)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 4 567 | 24.57 |
| சரத் பொன்சேகா | 11 567 | 62.39 |
| ஏனையவர்கள் | 2424 | 13.04 |
| செல்லுபடியான வாக்குகள் | 18 590 | 95.58 |
| நிராகரிக்கப்பட்டவை | 860 | 4.42 |
| வாக்களிக்கப்பட்டவை | 19 450 | 29.86 |
| பதிவு செய்யப்பட்டவை | 65 141 | -- |

### வன்னி மாவட்டம் (மன்னார்)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 6 656 | 23.18 |
| சரத் பொன்சேகா | 20 157 | 70.19 |
| ஏனையவர்கள் | 1904 | 06.63 |
| செல்லுபடியான வாக்குகள் | 28 717 | 98.44 |
| நிராகரிக்கப்பட்டவை | 455 | 01.56 |
| வாக்களிக்கப்பட்டவை | 29 172 | 34.19 |
| பதிவு செய்யப்பட்டவை | 85 322 | -- |

### அநுராதபுரம் மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 298 448 | 66.32 |
| சரத் பொன்சேகா | 143 761 | 31.94 |
| ஏனையவர்கள் | 7829 | 1.74 |
| செல்லுபடியான வாக்குகள் | 450 038 | 99.17 |
| நிராகரிக்கப்பட்டவை | 3 785 | 0.83 |
| வாக்களிக்கப்பட்டவை | 453 823 | 78.35 |
| பதிவு செய்யப்பட்டவை | 579 261 | -- |

### பதுளை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 237 579 | 53.23 |
| சரத் பொன்சேகா | 198 835 | 44.55 |
| ஏனையவர்கள் | 9880 | 2.22 |
| செல்லுபடியான வாக்குகள் | 446 294 | 98.66 |
| நிராகரிக்கப்பட்டவை | 6 083 | 1.34 |
| வாக்களிக்கப்பட்டவை | 452 377 | 78.70 |
| பதிவு செய்யப்பட்டவை | 574 814 | |

### மட்டக்களப்பு மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 55 661 | 26.28 |
| சரத் பொன்சேகா | 145 996 | 68.92 |
| ஏனையவர்கள் | 10 121 | 4.08 |
| செல்லுபடியான வாக்குகள் | 211 828 | 97.97 |
| நிராகரிக்கப்பட்டவை | 4394 | 2.03 |
| வாக்களிக்கப்பட்டவை | 216 222 | 64.81 |
| பதிவு செய்யப்பட்டவை | 333 644 | |

### யாழ். மாவட்டம் (உடுப்பிட்டி)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 2545 | 19.06 |
| சரத் பொன்சேகா | 8 974 | 67.20 |
| ஏனையவர்கள் | 1836 | 13.74 |
| செல்லுபடியான வாக்குகள் | 13 355 | 95.70 |
| நிராகரிக்கப்பட்டவை. | 600 | 4.30 |
| வாக்களிக்கப்பட்டவை | 13 955 | 24.73 |
| பதிவு செய்யப்பட்டவை | 56 426 | |

### யாழ். மாவட்டம் (யாழ்ப்பாணம்)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 3 296 | 27.56 |
| சரத் பொன்சேகா | 7 914 | 66.17 |
| ஏனையவர்கள் | 750 | 6.27 |
| செல்லுபடியான வாக்குகள் | 11 960 | 96.34 |
| நிராகரிக்கப்பட்டவை | 454 | 3.66 |
| வாக்களிக்கப்பட்டவை | 12 414 | 19.18 |
| பதிவு செய்யப்பட்டவை | 64 714 | |

### யாழ் மாவட்டம் (ஊர்காவற்றுறை)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 4 611 | 46.19 |
| சரத் பொன்சேகா | 3 976 | 39.83 |
| 'ஏனையவர்கள் | 1396 | 13.98 |
| செல்லுபடியான வாக்குகள் | 9 983 | 96.73 |
| நிராகரிக்கப்பட்டவை | 338 | 3.27 |
| வாக்களிக்கப்பட்டவை | 10 321 | 19.43 |
| பதிவு செய்யப்பட்டவை | 53 111 | -- |

### வன்னி மாவட்டம் (முல்லைத்தீவு)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 1726 | 18.43 |
| சரத் பொன்சேகா | 6882 | 73.47 |
| ஏனையவர்கள் | 0759 | 8.10 |
| செல்லுபடியான வாக்குகள் | 9 367 | 97.32 |
| நிராகரிக்கப்பட்டவை | 0258 | 2.68 |
| வாக்களிக்கப்பட்டவை | 9 625 | 14.00 |
| பதிவு செய்யப்பட்டவை | 68 729 | |

### குருநாகல் மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 582 784 | 63.08 |
| சரத் பொன்சேகா | 327 594 | 35.46 |
| ஏனையவர்கள் | 13 515 | 1.46 |
| செல்லுபடியான வாக்குகள் | 923 893 | 99.29 |
| நிராகரிக்கப்பட்டவை | 6644 | 0.71 |
| வாக்களிக்கப்பட்டவை | 930 537 | 78.62 |
| பதிவு செய்யப்பட்டவை | 1183 649 | |

### மாத்துறை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 296 155 | 65.53 |
| சரத் பொன்சேகா | 148 510 | 32.86 |
| ஏனையவர்கள் | 7264 | 1.61 |
| செல்லுபடியான வாக்குகள் | 451 929 | 99.34 |
| நிராகரிக்கப்பட்டவை | 3 025 | 0.66 |
| வாக்களிக்கப்பட்டவை | 454 954 | 78.60 |
| பதிவு செய்யப்பட்டவை | 578 858 | |

### கொழும்பு மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 614 740 | 52.93 |
| சரத் பொன்சேகா | 533 022 | 45.90 |
| ஏனையவர்கள் | 13 620 | 1.17 |
| செல்லுபடியான வாக்குகள் | 1161 382 | 99.03 |
| நிராகரிக்கப்பட்டவை | 11394 | 0.97 |
| வாக்களிக்கப்பட்டவை | 1172 776 | 77.06 |
| பதிவு செய்யப்பட்டவை | 1521 854 | |

### யாழ் மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 41 910 | 24.86 |
| சரத் பொன்சேகா | 106 950 | 63.44 |
| ஏனையவர்கள் | 19 723 | 11.09 |
| செல்லுபடியான வாக்குகள் | 168 583 | 96.34 |
| நிராகரிக்கப்பட்டவை | 6402 | 3.66 |
| வாக்களிக்கப்பட்டவை | 174 985 | 24.26 |
| பதிவு செய்யப்பட்டவை | 721 359 | |

### யாழ். மாவட்டம் (மானிப்பாய்)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 5749 | 26.62 |
| சரத் பொன்சேகா | 13 390 | 62.01 |
| ஏனையவர்கள் | 2455 | 11.37 |
| செல்லுபடியான வாக்குகள் | 21 594 | 96.08 |
| நிராகரிக்கப்பட்டவை | 881 | 3.92 |
| வாக்களிக்கப்பட்டவை | 22 475 | 31.60 |
| பதிவு செய்யப்பட்டவை | 71114 | |

### யாழ். மாவட்டம் (காங்கேசன்துறை)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 4559 | 31.57 |
| சரத் பொன்சேகா | 8216 | 56.90 |
| ஏனையவர்கள் | 1665 | 11.53 |
| செல்லுபடியான வாக்குகள் | 14 440 | 96.70 |
| நிராகரிக்கப்பட்டவை | 493 | 3.30 |
| வாக்களிக்கப்பட்டவை | 14 933 | 21.62 |
| பதிவு செய்யப்பட்டவை | 69 082 | |

### யாழ். மாவட்டம் (பருத்தித்துறை)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 2 361 | 19.06 |
| சரத் பொன்சேகா | 8 585 | 69.30 |
| ஏனையவர்கள் | 1442 | 11.64 |
| செல்லுபடியான வாக்குகள் | 12 388 | 96.57 |
| நிராகரிக்கப்பட்டவை | 440 | 3.43 |
| வாக்களிக்கப்பட்டவை | 12 828 | 26.39 |
| பதிவு செய்யப்பட்டவை | 48 613 | |

### வன்னி மாவட்டம் (வவுனியா)

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 13 742 | 28.53 |
| சரத் பொன்சேகா | 31 796 | 66.02 |
| ஏனையவர்கள் | 2625 | 5.45 |
| செல்லுபடியான வாக்குகள் | 48 163 | 97.30 |
| நிராகரிக்கப்பட்டவை | 1 335 | 2.70 |
| வாக்களிக்கப்பட்டவை | 49 498 | 43.83 |
| பதிவு செய்யப்பட்டவை | 112 924 | |

### மாத்துறை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 157 953 | 59.74 |
| சரத் பொன்சேகா | 100 513 | 38.01 |
| ஏனையவர்கள் | 5953 | 2.25 |
| செல்லுபடியான வாக்குகள் | 264 419 | 99.00 |
| நிராகரிக்கப்பட்டவை | 2666 | 1.00 |
| வாக்களிக்கப்பட்டவை | 267 085 | 77.94 |
| பதிவு செய்யப்பட்டவை | 342 684 | |

### அம்பாந்தோட்டை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 226 887 | 67.21 |
| சரத் பொன்சேகா | 105 336 | 31.26 |
| ஏனையவர்கள் | 5341 | 1.59 |
| செல்லுபடியான வாக்குகள் | 337 564 | 99.35 |
| நிராகரிக்கப்பட்டவை | 2 218 | 0.65 |
| வாக்களிக்கப்பட்டவை | 339 782 | 80.67 |
| பதிவு செய்யப்பட்டவை | 421 186 | |

### புத்தளம் மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 201 981 | 58.70 |
| சரத் பொன்சேகா | 136 234 | 39.59 |
| ஏனையவர்கள் | 5898 | 1.71 |
| செல்லுபடியான வாக்குகள் | 344 113 | 99.17 |
| நிராகரிக்கப்பட்டவை | 2886 | 0.83 |
| வாக்களிக்கப்பட்டவை | 346 999 | 70.02 |
| பதிவு செய்யப்பட்டவை | 495 575 | |

### காலி மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 38 6971 | 63.69 |
| சரத் பொன்சேகா | 211 633 | 34.83 |
| ஏனையவர்கள் | 9017 | 2.58 |
| செல்லுபடியான வாக்குகள் | 607 621 | 99.38 |
| நிராகரிக்கப்பட்டவை | 3765 | 0.62 |
| வாக்களிக்கப்பட்டவை | 611 386 | 80.25 |
| பதிவு செய்யப்பட்டவை | 761 815 | - |

### களுத்துறை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 412 562 | 63.06 |
| சரத் பொன்சேகா | 231 807 | 35.47 |
| ஏனையவர்கள் | 9880 | 1.47 |
| செல்லுபடியான வாக்குகள் | 654 249 | 99.31 |
| நிராகரிக்கப்பட்டவை | 4541 | 0.69 |
| வாக்களிக்கப்பட்டவை | 658 790 | 81.01 |
| பதிவு செய்யப்பட்டவை | 813 233 | |

### நுவரெலியா மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 151 604 | 43.77 |
| சரத் பொன்சேகா | 180 604 | 52.14 |
| ஏனையவர்கள் | 14 174 | 4.09 |
| செல்லுபடியான வாக்குகள் | 346 382 | 98.17 |
| நிராகரிக்கப்பட்டவை | 6 462 | 1.83 |
| வாக்களிக்கப்பட்டவை | 352 844 | 77.19 |
| பதிவு செய்யப்பட்டவை | 457 137 | |

### கண்டி மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 406 636 | 54.16 |
| சரத் பொன்சேகா | 329 492 | 43.83 |
| ஏனையவர்கள் | 14 658 | 1.95 |
| செல்லுபடியான வாக்குகள் | 750 786 | 98.85 |
| நிராகரிக்கப்பட்டவை | 8700 | 1.15 |
| வாக்களிக்கப்பட்டவை | 759 486 | 78.26 |
| பதிவு செய்யப்பட்டவை | 970 456 | |

### இரத்திரனபுரி மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 377 734 | 63.76 |
| சரத் பொன்சேகா | 203 566 | 34.36 |
| ஏனையவர்கள் | 11 126 | 1.88 |
| செல்லுபடியான வாக்குகள் | 592 426 | 99.26 |
| நிராகரிக்கப்பட்டவை | 4 430 | 0.74 |
| வாக்களிக்கப்பட்டவை | 596 856 | 81.24 |
| பதிவு செய்யப்பட்டவை | 734 651 | |

### பொலநறுவை மாவட்டம்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 144 889 | 64.92 |
| சரத் பொன்சேகா | 75 026 | 33.62 |
| ஏனையவர்கள் | 3260 | 1.46 |
| செல்லுபடியான வாக்குகள் | 223 175 | 99.34 |
| நிராகரிக்கப்பட்டவை | 1472 | 0.66 |
| வாக்களிக்கப்பட்டவை | 224 647 | 80.13 |
| பதிவு செய்யப்பட்டவை | 280 337 | |

## பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் இரத்தாகவில்லை

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்ற உத்தரவுகளை இரத்து செய்யுமாறு தேர்தல் ஆணையாளர் பணிப்புரை விடுத்தபோதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வட மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நிமால் லெவ்கே மற்றும் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆகியோரே இவ்வாறு தேர்தல் காலத்தில் இடமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர்.

தேர்தல் காலத்தில் இடமாற்றங்களை வழங்கக் கூடாது என்ற தேர்தல் ஆணையாளரின் உத்தரவு இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரியவிற்கு இது தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் லெவ்கே கொழும்பிலிருந்து பணிகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமந்த சிகேரா பொலிஸ் நலத்திட்டப் பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## தேர்தல் தினத்தில் அரச ஊடகங்களின் நடவடிக்கை தொடர்பில் பவ்ரல் அதிருப்தி

ஆறாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரியும் நோக்கில் நடைபெற்ற வாக்கெடுப்பு தினத்தில் அரச ஊடகங்கள் செயற்பட்ட விதம் தொடர்பில் முன்னணித் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் வாக்குரிமை தொடர்பில் தேர்தல் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள் ஏற்புடையதல்ல என சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த பிரசாரங்களின் மூலம் வாக்காளர்களின் மனோநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் தினத்திற்கு முன்னரும் சில பாரிய தேர்தல் மீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பவ்ரல் அமைப்பு தேர்தல் தினத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

75 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாகவும் இதில் 300 சம்பவங்கள் பாரிய சம்பவங்களாக கருதப்படவேண்டியவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க சொத்துக்கள் அதிகளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் தேர்தல் தினத்தில் அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றதாகவும் தமது அமைப்பிற்கு 71 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை தேர்தலில் 70 வீதமானவர்கள் வாக்களித்துள்ளதாகவும் இதில் வடக்குப்பிரதேசத்தில் 20 வீதமானோரே வாக்களித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ச-5)

## வவு. முகாம் வாக்காளர்களுக்கு போதிய வசதி செய்யப்படவில்லை

### சம்பந்தன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வவுனியா முகாமிலுள்ள வாக்காளர்களுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படாமை, வன்னி யாழ். மாவட் டங்களில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக் குதல்கள் ஆகிய சம்பவங்கள் குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோர் கையொப்பமிட்டு தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

ஆனந்தகுமாரசுவாமி நிவாரண கிராமத்திலுள்ள மக்கள் காலை 7 மணிமுதல் காத்திருந்தபோதும், அவர்களுக்கான போக்குவரத்து வழங்கப்படவில்லை. கிட்டத்தட்ட மூவாயிரம் வாக்காளர்கள் நண்பகல் 12 மணிவரை காத்திருந்தனர்.

அதேவேளை, வன்னி மாவட்டத்தின் பண்டாரக்குளம் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்கெடுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த போது இரண்டு கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இது வாக்களிப்பு வீதத்தைக் குறைவடையச் செய்தது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இச் சம்பவத்தில் சிலர் காயமடைந்தும் உள்ளனர். இதனால் சுதந்திரமான தேர்தல் நடைபெறுவதற்குத் தடை ஏற்பட்டிருந்தது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கொழும்பில் பதற்றம்!

(கொழும்பு)

கொழும்பில் பல்வேறு பகுதிகளிலும் பதற்றம் நிலவுதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளின்படி மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். இந்நிலையில் கொழும்பில் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்கிய பிரதேசங்களை சிலர் தாக்கத் திட்டமிட்டுள்ளது தெரியவந்துள்ளதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் சன நாடமட்டம் மிகக் குறைவாக காணப்படுவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)







எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தங்கியுள்ள கொழும்பு சினமன் லேக்ஹோட்டலைச் சுற்றி படையினர் சூழ்ந்திருப்பதைப் படங்களில் காணலாம்.

# பன்றிக்காய்ச்சலைக் கையாண்ட விதத்தில் உலக சுகாதார நிறுவனம் மீது விமர்சனம்

கடந்த ஆண்டு உலக நாடுகளில் பரவிய பன்றிக்காய்ச்சலை உலக சுகாதார நிறுவனமும் மருந்துகள் தயாரிக்கும் நிறுவனங்களும் கையாண்ட விதம் குறித்து அவர்கள் மீது கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான அமைப்பான ஐரோப்பிய குழுமத்தில் இது தொடர்பாக நடந்த விசாரணையின்போது மருந்து தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து வந்த அழுத்தம் காரணமாக பன்றிக்காய்ச்சல் வைரஸின் ஆபத்து குறித்து உலக சுகாதார நிறுவனம் மிகைப்படுத்திக் காட்டியதாக அதன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

பன்றிக்காய்ச்சல் விலங்கிடமிருந்து மனிதனுக்குப் பரவக்கூடிய ஆபத்தானதொரு நோயாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது.

இதன் விளைவாக இந்த நோய் தாக்கினால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகபட்சமாக இருக்கும் என்கிற அச்சத்தில் பல ஐரோப்பிய நாடுகள் இதற்கான தடுப்பு மருந்துகளை மில்லியன் கணக்கில் வாங்கிக் குவித்தன.

பன்றிக்காய்ச்சல் காரணமாக உலகம் தழுவிய அளவில் ஆயிரக்கணக்கானவர்கள் இறந்திருந்தாலும் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதைப் போல் இந்த வைரஸ் கடுமையானதாக இருக்கவில்லை. (2-6)

# அல்கொய்தாவின் பலவீனத்தை ஓசாமாவின் பேச்சு காட்டுகிறது

## அமெரிக்க அதிபர் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

ஓசாமா பின்லேடன் கடைசியாக வழங்கிய ஒலிநாடா என்ற பெயரில் வெளியாகியிருக்கும் செய்தியில் அல்கொய்தா வலையமைப்பு எந்த அளவுக்கு பலவீனம் ஆகிவிட்டது என்பதன் ஓர் அடையாளம் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்க விமானம் ஒன்றை டெட்ராய்ட் நகரத்தின் மீது தகர்க்க சென்ற மாதம் நடந்த முறியடிக்கப்பட்ட முயற்சியைப் பாராட்டுவதாகவும் மென்மேலும் அல்கொய்தா தாக்குதல்கள் நடத்தும் என்று எச்சரிப்பதாகவும் அந்த ஒலிநாடாவின் செய்தி அமைந்திருந்தது.



முறியடிக்கப்பட்ட விமான வெடிகுண்டு முயற்சி ஓசாமா பின்லேடனின் உத்தரவின் பேரில் நடந்த ஓர் விடயம் தான் என்கிற அவசியம் இல்லை.

ஆனால் அந்தத் தாக்குதலுக்கு தானே காரணம் என்பதுபோல காட்டிக்கொள்ள முயற்சி செய்வது அல்கொய்தா மிகவும் பலவீனம் அடைந்துவிட்டது என்பதையே காட்டுகிறது என ஒபாமா கூறியுள்ளார். (2-6)

# கார் பந்தயத்தில் 8 பேர் பலி

(குவைத்)


குவைத்தில் சட்டவிரோதமாக நடத்தப்பட்ட கார் பந்தயத்தின்போது நிகழ்ந்த விபத்தில் எட்டுப் பேர் பலியாகினர். 14 பேர் படுகாயமடைந்தனர்.

வளைகுடா நாடுகளில் ஒன்றான குவைத்தில் கார் வைத்திருப்பவர்கள் அதிகம் என்பதால் ஆண்டு தோறும் சட்டத்திற்குப் புறம்பாக கார் பந்தயம் நடப்பது வழக்கம். இந்த ஆண்டு டோகாவில் கடந்த திங்கட்கிழமை நடந்த கார் பந்தயத்தில் கலந்து கொண்ட இரு கார்கள் பாதையின் ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு கார்களின் மீது மோதியதோடு பார்வையாளர்கள் மீதும் பாய்ந்தது.

இச்சம்பவத்தில் குவைத்தைச் சேர்ந்த எட்டு வாலிபர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். 14 பேர் படுகாயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-6)

# மக்களிடையே மதபேதம் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது

## போப்பாண்டவர் தெரிவிப்பு



(ரோம்)


மதங்களிடையே பேதங் கள் அதிகரித்து வருவது கவலையளிக்கிறது என்று போப் பாண்டவர் 16 ஆவது பெனடிக்ட் தெரிவித்துள் ளார்.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமை நிலவுவதற்காக நடத்தப்படும் பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் இக் கருத் தைத் தெரிவித்துள்ளார். மக்களிடையே மதபேதம் அதிகரித்து வருகிறது.

அத்துடன் கிறிஸ்தவ சமயம் மீதான வெறுப்பும் அதிகரித்துள்ளது. மக்கள் மனமாச்சர்யங்களைக் கடந்து ஒன்றுபட வேண்டும். விவாதத்திற்குரிய விடயங்களான கருக்கலைப்பு, கருணைக் கொலை உள்ளிட்டவற்றில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரம்பை நிர்ணயித்து மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (6)

# ஹெய்ட்டியில் இடிபாடுகளிலிருந்து மேலும் ஒருவர் உயிருடன் மீட்பு

## உணவு கிடைக்காமல் மக்கள் மோதல்



(போர்ட் -ஓவ்-பிரின்ஸ்)

அமெரிக்கா அருகே கரீபியன் கடல் பகுதி யில் உள்ள ஹெய்ட்டி நாட்டில் கடந்த 12 ஆம் திகதி கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இதில் சுமார் 2 இலட்சம் பேர் பலியனார்கள். தலை நகர் போர்ட் -ஓவ்-பிரின்ஸ் நகரில் பெரும்பாலான வீடுகள், கடைகள், கட்டடங் கள் இடிந்து தரைமட்டமாயின.

தற்போது இடிபாடுகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. அத்துடன் அவற்றுக்குள் சிக்கிக் கிடப்பவர்களும் உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர். மீட்புப் பணியில் அமெரிக்கா, பிரேசில், கிரீஸ், பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர் கள் ஈடுபட்டுள்ளனர்.

பூகம்பம் ஏற்பட்டு இன்றுடன் 16 நாட்கள் ஆகிவிட்டது. 14ஆவது நாளான நேற்று முன்தினம் போர்ட் - ஓவ்-பிரின்ஸ் நகரில் ஒரு கட்டடத்தின் இடிபாடுகளில் சிக்கிக் கிடந்த 35 வயது நபர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார். அவரின் உடல் முழுவதும் இடிபாடுகளில் அமுங்கி இருந்தது.

ஆனால், அவருக்கு உடலில் காயங்கள் எதுவும் இல்லை. இருந்தாலும் அவரை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். இவரை பிரேசில் நாட்டுக் குழுவினர் மீட்டனர். இவரையும் சேர்த்து இதுவரை இடிபாடுகளில் சிக்கிக் கிடந்த 30 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, பூகம்பம் ஏற்பட்ட ஹெய்ட்டியில் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். உணவு கிடைக் காததால் பசி பட்டினியால் வாடுகின்றனர்.

வீடுகளை இழந்தவர்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வெளிநாடுகள் உணவுப் பொருட்களை அனுப்பி வருகின்றன.

இந்த நிலையில் போர்ட் - ஓவ் -பிரின்ஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் உணவு வழங்கப்பட்டது. அவற்றைப் பெறுவதில் மக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது.

மோதலைக் கட்டுப்படுத்த முடியாததால் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஐ.நா. சபை இராணுவ வீரர்கள் கண்ணீர்ப் புகை குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதைத் தொடர்ந்து கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.



இச் சம்பவத்தை வன்முறை என்று கூற முடியாது. ஏனெனில் மக்கள் சாப்பிட உணவு இல்லை. அதற்காகத்தான் அவர்கள் போராடுகின்றனர் என்று பிரேசில் இராணுவ அதிகாரி பெர்னாண்டோ சோரஸ் தெரிவித்தார்.

பசியால் வாடும் மக்களுக்கு உணவுப் பொருட்களை அமெரிக்காவும், ஐ.நா. சபையும் வழங்கி வருகிறது.

பூகம்பத்தால் சிதைந்து கிடக்கும் நாட்டை சீரமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (2-6)




# அவதார் திரைப்படம் வசூலில் உலக சாதனை படைத்துள்ளது

அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளில் மிகவும் வெற்றிகரமாக திரையிடப்பட்டு வரும் அவதார் திரைப்படம் வசூலில் உலக சாதனை படைத்துள்ளது.

உலக திரைப்பட வரலாற்றில் அதிகளவு வசூலைக் குவித்த் திரைப்படம் என்ற பெருமையை அவதார் பெற்றுக் கொண்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த சாதனையை வகித்து வந்த டைட்டானிக் திரைப்படத்தின் வசூல் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

அவதார் திரைப்படத்தை டுவன்ரித் சென்சரி பொக்ஸ் ஷோ நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத் திரைப்படம் திரையிடப்பட்டு ஆறு வார காலப் பகுதிக்குள் 1.859 பில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலாகக் குவித்துள்ளது. இதற்கு முன்னர் டைட்டானிக் திரைப்படம் 1.843 பில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலில் குவித்திருந்தது.

எனினும், அவதார் டிக்கட் விற்பனையின்போது பணவீக்கம் மற்றும் டிக்கட் விலை குறித்து கவனம் செலுத்தப்படவில்லை.

வசூலில் உலக சாதனை படைத்த டைட்டானிக் மற்றும் அவதார் ஆகிய இரண்டு திரைப்படங்களையுமே பிரபல ஹொலிவூட் இயக்குநர் ஜேம்ஸ் கமரூன் இயக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திரைப்படத்தை தயாரிப்பதற்காக குறைந்தபட்சம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டிருக்கலாம் என தெரியவருகிறது. (6)



துருக்கி -ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் முக்கூட்டு மாநாடு கடந்த திங்கட் கிழமை துருக்கியின் தலைநகர் ஸ்தான்புல்லில் இடம்பெற்றது.

இம் மாநாட்டில் கலந்துகொண்ட துருக்கிய ஜனாதிபதி அப்துல்லா குல், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய், பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# கொக்கரெல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கொமாண்டோக்கள்

## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொக்கரெல்ல காவல்துறையினரால் சென்ற திங்கள் கைதுசெய்யப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவக் கேணல் சுஜித் ஜெயசேகர உள்ளிட்ட இராணுவக் கொமாண்டோ பிரிவின் 20 படையினர் பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பேரில் கொக்கரெல்ல காவல்துறையினரால், மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புச் செயலாளரின் உத்தரவின் பேரில் கொக்கரெல்ல காவல்துறை நிலையத்திற்குச் சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழு, இவர்களைக் கைது செய்து தமது தலைமையகத்திற்குக்கொண்டு சென்றது.

மேலும் அவர் உத்தரவின் பேரில் இவர்களைத் தடுத்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனரல் சரத்பொன்சேகாவின் சார்பில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு கிளிநொச்சி செல்லும் வேளையில் இவர்கள் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# திருக்கேதீஸ்வரக் கோயில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

இந்தியாவிலிருந்தும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வரும் பக்தர்களின் நலன் கருதி திருக்கேதீஸ்வரக் கோயில் மறுசீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கோயிலைச் சூழவுள்ள வீதிகள் மற்றும் பிரதான வீதி ம்றுசீரமைக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திர சிறி தெரிவித்துள்ளார்.

இதற்காக ரூபா 270 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பக்தர்களின் நன்மை கருதி மகாசிவராத்திரிக்கும் (13.02.2010) முன்பதாக கோயிலைச் சூழவுள்ள வீதிகள் சீரமைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

சரித்திர பிரசித்தி வாய்ந்த கோயிலையும் அதன் சுற்றாடலையும் புனித பூமியாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியதை நினைவுபடுத்திய ஆளுநர் ,1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புலிகள் இயக்கத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளால் கோயில் செயற்பாடுகளுக்கு தடங்கல்கள் ஏற்பட்டிருந்தன எனவும் தெரிவித்தார்.

மேலும் கோயிலைச் சூழவுள்ள வீதிகளை உடனடியாக மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (2)

# கொமன்வெல்த் இணையத்தளத்தில் தவறாக வெளியான இந்திய வரைப்படம்

கொமன்வெல்த் இணையத்தளத்தில் இந்திய வரைப்படத்தை தவறாக வெளியிட்டதற்கு அந்த அமைப்பு மன்னிப்பு கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கமைய கொமன்வெல்த் போட்டிகள் தொடர்பாக அதன் இணையத் தளத் தில் இந்திய வரைப்படத்தில் இடம்பெறவேண்டிய காஷ்மீர் மற்றும் குஜராத் பகுதிகள் பாகிஸ்தான் நாட்டு வரைப்படத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த இந்தியா இது தொடர்பாக அந்த அமைப்பின் இந்தச் செயலை கடுமையாக கண்டித்ததுடன் இது தொடர்பாக விளக்கமளிக்கவும் கோரியிருந்தது.

இந்நிலையில் கொமன்வெல்த் அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் , இணையத்தளத்தில் இடம்பெற்ற இந்திய வரைப்படத்தில் சில இந்திய பகுதிகள் இடம்பெறாமல் அவை பாகிஸ்தான் வரைப்படத்தில் இடம்பெற்று விட்டது மிகப்பெரிய தவறாகும். இதற்காக இந்திய அரசிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறது என்று தெரிவித்துள்ளது. (2-6)

## ஊடகவியலாளர் அமைப்பு கண்டனம்

ஜனாதிபதித் தேர்தல் முடிபுகள் வெளியாகும் இத்தருணத்தில் இயங்கும் இணையத்தளங்கள் முடக்கப்பட்டிருப்பதை வன்மையாக கண்டிப்பதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது. லங்கா ஈ நியூஸ் ,இன்போலங்கா உள்ளிட்ட சில இணையத்தளங்கள் இணைய வழங்குநர்களால் முடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மக்களின் கருத்தறியும் சுதந்திரத்தை இந்த நடவடிக்கை பெரிதும் பாதிப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பிழையான வழியில் செலுத்தியதால் எதியோப்பிய விமானம் விபத்துக்குள்ளானது

(கொழும்பு)

பிழையான வழியில் பயணித்த காரணத்தினால் எதியோப்பிய விமானம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லெபனானின் பெய்ரூட் விமான நிலையம் பரிந்துரை செய்த பாதையில் பயணிக்காது குறித்த எதியோப்பிய விமானம் வேறும் பாதையில் பயணித்தாகக் குறிப்பிடப்படுகிறது.

சரியான பாதையில் செல்லுமாறு கட்டுப்பாட்டு நிலையத்தினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் என்ன காரணத்தினால் இவ்வாறு பிழையான பாதையில் விமானி விமானத்தை செலுத்தினார் என்பது இது வரையில் கண்டறியப்படவில்லை.

இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 90 பேரும் உயிரிழந்திருக்கக்கூடுமென அச்சம் வெளியிட்டுள்ளது.

மேலும் இதுவரையில் 24 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் விமான நிலையத்தின் கறுப்புப் பெட்டி இன்னமும் கிடைக் கப்பெறவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

சரியான பாதையில் செல்லுமாறு விமானிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் அவர் மிக வேகமாக விமானத்தை திருப்பியதாகவும் அந்தத் தருணத்தில் இருந்து குறித்த விமானம் ரேடாரை விட்டு விலகிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விமானி இருபது ஆண்டுகள் அனுபவம் உடையவர் எனக் குறிப்பிடப்படுகிறது.

விமானத்தில் பயணித்தவர்களில் பெய்ரூட்டுக்கான பிரான்ஸ் தூதுவரின் மனைவி மார்லாவும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(2-6)

# ஐக்கிய தேசியகட்சி பாராளுமன்ற உறுப்பினர் மீது துப்பாக்கி பிரயோகம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருணாகல் மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவரின் வீட்டில் இருந்தபோதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த மூவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை குருணாகல் காவல்துறையினர் ஆரம்பித்துள்ளனர். (2-6)

# கண்டியில் வாக்கு எண்ணும் மையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட வாக்குப்பெட்டிகள்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

கண்டி சில்வஸ்டர் வித்தியாலயத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையத்திற்குள் தமது பிரதிநிதிகளை நேற்று முன்தினம் மாலை 5 மணி முதல் 7 மணி வரை அனுமதிக்கவில்லை எனவும் இரண்டு வாக்குப் பெட்டிகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தேர்தல் ஆணையாளரிடம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை மீறி வாக்குப்பெட்டிகள் வேறுபடுத்தப்பட்டமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கப்பட்ட பின்னரே தமது பிரதிநிதிகளுக்கு வாக்கு எண்ணும் மையங்களுக்குச் செல்ல அனுமதிக்கப் பட்டதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# தேர்தல் விதிமுறைகளை மீறினார் ஜெனரல் சரத் பொன்சேகா

## ஐ.ம.சு.மு. தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே சரத்பொன்சேகா இலத்திரனியல் ஊடகங்களில் தோன்றி பேசியமை தேர்தல் விதிமுறைகளை மீறியுள்ளதாக ஐ.ம.சு. முன்னணி செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு உடனடியாக செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த 23ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்துள்ள நிலையில் சரத் பொன்சேகா இலத்திரனியல் ஊடகங்களில் பேசியுள்ளமை தேர்தல் விதிமுறைகளை பாரிய அளவில் மீறியுள்ளார் என்றும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மேலும் தெரிவிக்கையில்,

தனக்குரிய வாக்குரிமை கிடைக்காமையை காரணமாக்கிக் கொண்டு செய்துள்ள தவறு தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியே தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.


சரத் பொன்சேகா மட்டுமல்ல எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதம நீதியரசர் ஆகியோர் தேர்தல் விதிமுறைகளை மீறி இலத்திரனியல் ஊடகங்களில் பேசியுள்ளனர் என்றும் அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கை முடிவடைந்த குறிப்பிட்ட தினம் நள்ளிரவிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதுவித பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் வரலாற்றில் ஐந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் இருந்த போதிலும் வரலாற்றில் முதல் தடவையாக இது போன்ற சம்பவத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் எதிரணியினர் நாட்டு மக்களை ஏமாற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# முடிவுக்கு வந்தது பொன்சேகாவின் குடியுரிமை பற்றிய பிரச்சினை

## சரத் என் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)



ஜெனரல் சரத் பொன்சேகாவை தேர்தல் ஆணையாளர் ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்ததன் மூலம் அவரது குடியுரிமை பற்றிய பிரச்சினை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரஜையல்லாத ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட முடியாது. அவ்வாறான ஒருவரை தேர்தல் ஆணையாளரால் வேட்பாளராக அறிவிக்க முடியாது. தேர்தல் ஆணையாளர் பொன்சேகாவை வேட்பாளராக ஏற்றுக்கொண்டதன் மூலம் அவரது குடியுரிமை குறித்த பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (2-6)

# வன்னி மக்களைப் போலவே எம்மையும் மீளக்குடியமர்த்த வேண்டும்

## முஸ்லிம் சமூக அமைப்புக்கள் கூட்டாகக் கோரிக்கை



வன்னி மக்களை மீளக் குடியமர்த்தும் அதேவேளையிலேயே இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களையும் மீளக் குடியமர்த்த வேண்டுமென 35 முஸ்லிம் சமூக நிறுவனங்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு;

வடபகுதி முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு உள்ள உரிமையையும் அவர்களை மீளக்குடியமர்த்த வேண்டிய அவசரத்தையும் ஏற்றுக் கொள்வதில் காணப்படும் குறைபாடுகள் குறித்து இலங்கை முஸ்லிம் சமூக அமைப்புக்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளன.

போர் முடிவுற்று இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வுப் பணிகள் நடைபெற்று வருகின்ற நிலையில் மதிப்புடன் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கான திட்டத்தை அரசு எப்போது அறிவிக்கும் என எதிர்பார்த்து முஸ்லிம்கள் காத்திருக்கிறார்கள்.

அதுவே அவர்களைத் துன்பங்களில் இருந்து விடுவிக்கும். வடபகுதியில் இருந்து முஸ்லிம்கள் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்டு 2010ஆம் ஆண்டுடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

அவர்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பிச் சென்று தங்கள் வாழ்க்கையை மீளக்கட்டி எழுப்புவதற்கும் வருமானம் தரும் வழிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஏனைய சமூகங்களுடன் தமது எதிர்காலத்தைப் பகிர்ந்து கொள்வதற்குமான வாய்ப்பை இந்த ஆண்டு தரும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து தமது சொந்த இடங்களுக்குத் தாம் திரும்புவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அதற்கான உதவிகள் வழங்கப்படும் என்றும் இடம்பெயர்ந்த ஒரு இலட்சம் முஸ்லிம் மக்கள் எதிர் பார்த்திருந்தார்கள்.

மீள்குடியமர்வு இடம் பெற்றபோது அது அண்மையில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கானது என்பது புரிந்தது.

தமிழர்களின் மீள்குடியமர்வின் அவசரமும் அவர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டியதன் அவசியமும் புரிந்தபோதும் தங்களைப் பற்றியும் தமது தேவைகள் பற்றியும் கவனம் செலுத்தப்படாது இருப்பது குறித்தும் மீள்குடியமர்வுத் திட்டங்களுக்குள் தாங்கள் உள்ளடக்கப்படாதது குறித்தும் முஸ்லிம்கள் பெரும் வருத்தமடைந்துள்ளார்கள்.

தாம் மீளக்குடியமர்வதற்கான அனுமதியைப் பெறுவதற்கு முஸ்லிம்கள் பலர் தனிப்பட்ட ரீதியில் தமது வளங்களைப் பயன்படுத்தி முயற்சிகளை மேற்கொண்டனர்.

இருந்தாலும் கண்ணிவெடி அகற்றல், மீள்கட்டுமானம், அடிப்படை உதவிகள் என்பன போன்ற பல்வேறு சவால்களை அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வு தாமதப்படுத்தப்படுவது அவர்கள் மத்தியில் பெரும் சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

குடும்ப மற்றும் சமூக மட்டங்களில் உதவிகள் கிடைக்காமல் போவதால் தற்போதைய மீள்குடியமர்வுத் திட்டங்களில் இருந்து புறக்கணிக்கப்பட்டு விடுவார்கள், தமது சொத்துக்களுக்குப் பின்னர் உரிமை கோரும்போது இப்போது மீளக்குடியமர்த்தப்படும் மக்களுடன் அவர்களுக்கு முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற அச்சங்கள் முஸ்லிம்கள் மத்தியில் எழுந்துள்ளன.

தமிழ் மக்களுடன் சேர்த்து வடக்கு முஸ்லிம்களும் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியது மிக முக்கியம். ஆனால் இதுவரையில் அந்த வகையிலான நடவடிக்கைகள் மிகக் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலையான அமைதியை உறுதிப்படுத்தும் விதத்தில் பின்வரும் கோரிக்கைகளை முஸ்லிம் சமூக அமைப்புக்களான நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஜனாதிபதியிடம் முன் வைக்கிறோம்.

ஃ வன்னி மக்களை மீளக்குடியமர்த்தும் அதேவேளையிலேயே இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களையும் மீளக்குடியமர்த்த வேண்டும்.

ஃ வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் இடம்பெயர்ந்து இருந்தபோது பிறந்தவர்கள் உட்பட அனைத்து முஸ்லிம்களையும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்க வேண்டும்.

ஃ இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கோ அல்லது அவர்கள் தற்பொழுது வசித்து வரும் இடங்களிலேயே வசிப்பதற்கோ அனுமதிக்க வேண்டும்.

ஃ முஸ்லிம் கிராமங்களுக்கும் முன்னுரிமை கொடுத்து அங்கும் கண்ணி வெடிகளை அகற்றவேண் டும்.

ஃ மீளக்குடியமர்பவர்களுக்கான உதவிகள், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றில் சமத்துவத்தைப் பேண வேண்டும்.

ஃ போர் பாதித்த பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சமூகங்களின் ஆலோசனையும் பங்களிப்பும் அதில் இடம் பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஃ காணிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உரிய பொறிமுறைகளையும் ஒழுங்குகளையும் செய்ய வேண்டும். அரச காணிகளை ஒதுக்கீடு செய்வது, கிராமங்களின் எல்லைகளைப் பிரிப்பது, சமூகங்களுக்கு இடையிலான இணக்கக் குழுக்கள் மூலமாகப் பொது வளங்களைப் பகிர்ந்து கொள்வது, ஒதுக்கீடு செய்வது போன்றவற்றுக்கும் முறையான பொறிமுறை அவசியம்.

ஃ 1990இல் முஸ்லிம்கள் வெளியேறிய போது அவர்களுக்கு ஏற்பட்ட சொத்து, அழிவுகள் பொது வளங்கள் என்பவற்றுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

ஃ பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உள்ளூர் அமைப்புக்களுக்கு அனுமதி வழங்கப்படுவதுடன் அனைத்துலக மற்றும் தேசிய அமைப்புக்களும் உதவி செய்வதற்கு அனுமதிக்கப்படும்போதுதான் சமூகங்களின் மீள்கட்டுமானம் காத்திரமானதாக இருக்கும்.

ஃ முஸ்லிம் மக்களின் கிராமங்களும் நிலங்களும் உயர் பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான மாற்று இடங்களும் கட்டுமானங்களும் வழங்கப்படவேண்டும்.

ஃ அரசு மற்றும் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட காணிப் பரிமாற்றம் மற்றும் நில ஒதுக்கீடுகளால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முஸ்லிம்களுக்கு அவர்களது முழுமையான நில உரிமை வழங்கப்பட வேண்டும்.

ஃ வடக்கு முஸ்லிம்களின் பலவந்தமான வெளியேற்றம் குறித்து எல்லாச் சமூகத்தினரிடமும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக எல்லாச் சமூகங்களையும் சேர்ந்தவர்களை உள்ளடக்கிய உண்மை அறியும் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.



ஃ கடந்த 19 ஆண்டுகளில் பெரியளவிலான இடம்பெயர்ந்தவர்கள் தமது காணிகளை திரும்பப் பெறுவது தொடர்பில் வடக்கு-கிழக்கில் காணப்படும் சட்டங்களையும், கட்டளைகளையும் திருத்தவேண்டும்.

தற்போது யாருடைய உதவிகளும் இன்றி முஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகிறார்கள். தமிழ்ச் சகோதரர்களுடன் சேர்ந்து தமது வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்பலாம் என்ற நம்பிக்கையுடனேயே அவர்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புகிறார்கள்.

வெளியேற்றப்பட்டு 20 வருடங்கள் கழித்து முஸ்லிம் மக்களின் இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அனைத்தையும் செய்யும்படி அவர்கள் சார்பில் வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களையும் ஜனாதிபதியை முஸ்லிம் சமூக நிறுவனங்கள் கூட்டாகக் கேட்டுக் கொள்கின்றன.

# புனர்வாழ்வு முகாமிலுள்ள புலி உறுப்பினர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துள்ளனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் 13 வாக்களிப்பு மையங்களில் வாக்களிப்பினை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

இதற்கமைய அரசாங்கப் புனர்வாழ்வு மையங்களில் உள்ள 3 ஆயிரத்து 494 முன்னாள் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

மேலும் முதல் தடவையாக புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு வாக்களிப்பில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# தேர்தல் அதிகாரி மீது அனுராதபுரத்தில் தாக்குதல்

அனுராதபுரத்தில் சிரேஸ்ட தேர்தல் அதிகாரி ஒருவர் மீது இனந்தெரியாத நபர்கள் கடுமையான தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். அனுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வாக்கு எண்ணும் மத்திய நிலையத்தின் பிரதான நுழைவாயிலுக்கு அருகாமையில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான நபர் தற்போது அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என அனுராதபுரம் பிரதேச தெரிவத்தாட்சி அதிகாரி எம்.கே. ஹேரத் தெரிவித்துள்ளார். தாக்குதல் சம்பவத்தினால் குறித்த சிரேஸ்ட தேர்தல் அதிகாரி படுகாயமடைந்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)

# தேர்தல் காலத்தில் பொதுச் சொத்துக்கள் அதிகளவில் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளன

## ஜே.சீ. வெலியமுன தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் மிகவும் மோசமான முறையில் பொதுச் சொத்துக்கள் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக ட்ரான்பெரன்ஸி இன்டர்நெசனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜே.சீ. வெலியமுன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரசாங்கச் சொத்து துஸ்பிரயோகம் தொடர்பில் 427 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் கூட்டமைப்பு ஆதரவாளர்களைத் தேர்தல் பிரசாரக் கூட்டங்க்ளுக்கு அழைத்துச் செல்லும் நோக்கில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 1024 பேரூந்துகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அலரி மாளிகை மற்றும் தபால் திணைக்களம் ஆகியனவும் துஸ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

17ஆவது திருத்தச் சட்ட மூலம் அமுல்படுத்தப்படாமையே இவ்வாறான தேர்தல் முறைகேடுகளுக்கான மூலக்காரணி என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்க ஊடகங்கள் ஆரம்பம் முதலே தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்ளாது பக்கச் சார்பாக செயற்பட்டு வந்ததாகவும் இதன் மூலம் 2010ஆம் ஆண்டு தேர்தல் வரலாற்றில் மிகவும் மோசமான முறைகேடுகள் இடம் பெற்ற தேர்தலாகப் பதிவு செய்யப்படும் என ஜே.சீ. வெலியமுன குறிப்பிட்டுள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)

நம்முடைய நன்மையை நாம் அடையாவிட்டாலும் பிறருடைய நன்மை இருக்கவே இருக்கிறது. அதனை சேர்ந்து செய்ய முயல்வோம்.
– ஜார்ஜ் எலியட்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## நாட்டின் எதிர்கால நலன் பற்றிய சிந்தனைகளே அவசியம்

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிபுகள் வெளியாகி விட்டன. மகிந்த ராஜபக்ஷி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

எனவே இந்த நாட்டின் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகிப்பார்.

இது தவிர இன்னமும் இரண்டு ஆண்டுகள் பாக்கி இருக்கக் கூடியதாக, ஜனாதிபதித் தேர்தலை அவர் நடத்தியிருப்பதால் அந்த இரண்டு ஆண்டுகளும் ஜனாதிபதியாகப் பதவி வகித்து அதன் முடிவில் 2010 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் பெற்ற வெற்றியின் பிரகாரம் பதவி பெறுவதற்குச் சட்டம் இடம் கொடுக்குமாயின் தொடர்ந்து எட்டு ஆண்டுகள் அவர் ஜனாதிபதியாகப் பதவிவகிப்பார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கும், சரத் பொன்சேகாவுக்குமான போட்டி இறுக்கமானது. யார் வெற்றி பெறுவார்கள் என்று ஊகிக்க முடியாத அளவுக்கு நிலைமை உள்ளது என்ற விமர்சனங்களின் மத்தியில், மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றியைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இத்தகைய எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்ட வெற்றியை மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொள்வதற்கு என்ன காரணம் என்ற ஆய்வுகளில் ஈடுபடுவோர் தத்தம் அறிவுக்கேற்ப விமர்சனங்களை முன்வைப்பர்.

இத்தகைய விமர்சனங்கள் நியாயமானவையாக அல்லது படுமோசமானதாக இருக்கலாம். இத்தகைய விமர்சனங்கள் பொறுப்பற்ற முறையில் வெளிவருவது கூட ஜனநாயகத்திற்குப் பாதகமாக அமையும் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

எதுவாயினும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அமோக வெற்றி பெற்றார் என்பதற்குள் அவர் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற முடியவில்லை என்ற உண்மையையும் புறந்தள்ளி விட முடியாது.

தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்கள் தமக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக அவர்களை ஓரம் தள்ளி விடவும் கூடாது.

எனவே தேர்தல் என்பது முடிந்து, முடிவுகள் வெளியாகிய பின்னர் அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து நாட்டின் அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் சுபீட்சத்திற்காகவும் பாடுபட வேண்டும்.

இதுவே ஜனநாயகத்தின் உயர் பண்பாகும். இதனைச் செய்வதற்கு எவரும் பின்னிற்கலாகாது.

இதைவிடுத்துத் தேர்தல் பழிவாங்கல்களில் எவர் ஈடுபட்டாலும் அது, இந்த நாட்டின் எதிர்கால ஆரோக்கியத்திற்குப் பங்கமாகவே அமையும்.

# தனது அரசியல் தந்திரோபாயங்களை ஜனாதிபதி தொடர்ந்து முன்னெடுப்பார்

## த ரைம்ஸ் பத்திரிகை தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளதால் அவர் தனது தற்போதைய தந்திரோபாயத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது அவரின் ஜனநாயக ரீதியிலான நற்சான்றுப் பத்திரங்கள் தொடர்பாக மேற்குலகு தெரிவித்துவரும் விமர்சனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக அவர் தொடர்ந்தும் சீனா, ஈரான், லிபியா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் நெருக்கமான பிணைப்புக்களை வைத்திருக்கும் தனது தந்திரோபயத்தைத் தொடர்ந்தும் முன்னெடுப்பார் என எதிர்பார்க்கப்படுவதாக பிரிட்டனின் த ரைம்ஸ் பத்திரிகை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கூறியுள்ளது.

கொழும்பிலிருந்து ரைம்ஸ் பத்திரிகையின் நிருபர் றல்ப் மைக்கல் இது தொடர்பாக கூறியிருப்பதாவது; சீனா, ஈரான், லிபியா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளுடன் நெருக்கமான பிணைப்புக்களை கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷ மேற்குலகின் விமர்சனங்களிலிருந்து விடுபடுவதற்கு முயற்சிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்துமாறு சர்வதேச சமூகம் விடுத்திருக்கும் அழைப்புக்களை அவர் தொடர்ந்தும் எதிர்ப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இலங்கையின் ஏற்றுமதிகளின் அநேகமானவை மேற்குலக சந்தைகளிலேயே தற்போதும் தங்கியுள்ளன. அதனால்இலங்கையில் பொருளாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடும். அத்துடன் மேற்கு நாடுகளே தற்போதும் இலங்கைக்கு அதிகளவு உதவி வழங்கும் நாடுகளாக உள்ளன. (2)

## நல்லை ஆதீனத்தில் நாளை சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இந்து அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் தொடர் கருத்தரங்கில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு 'நாவலர் காட்டும் சைவ வாழ்வியலில் சிவ சின்னங்கள்' என்ற பொருளில் சொற்பொழிவு இடம்பெறும்.

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் வழங்கும் இத் தொடர் சொற்பொழிவில் அனைவரையும் பங்குபற்றிப்பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கைச் சேர்ந்த தில்லையம்பலவாணர் விமலன் அண்மையில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சினால் யாழ்ப்பாண நீதி மற்றும் நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதவான் ஆக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக கடமையாற்றி வருவதுடன் இந்தியா பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் சமூக சேவை (Social work) துறையில் கலாநிதி பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (6)

## பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் விரைவில் முன்னெடுக்கப்படும்

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

விரைவில் பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் நாடு பாரிய அபிவிருத்தித்திட்டங்களுடன் கூடிய புதிய சகாப்தம் நோக்கிச் செல்லும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹொரனை வித்யார்த்த பிரிவெனவில் வாக்களிப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் தற்போது அமுலில் உள்ள தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள் ளதுடன் மக்கள் சுபீட்சமாகவும் அமைதியாகவும் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

## வாக்களிப்பில் சிரமத்தை எதிர்கொண்டார் விக்கிரமபாகு கருணாரட்ன

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்புத் தினமான நேற்று முன்தினம் கொழும்பு கொம்பனித்தெருவில் அமைந்துள்ள குணவர்த்தனாராம வாக்களிப்பு நிலையத்துக்கு வாக்களிக்கச் சென்ற இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரட்னவுக்கு வாக்களிப்பதற்கு வாக்களிப்பு நிலைய அதிகாரிகள் இடமளிக்கவில்லை.

இடதுசாரி முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விக்கிரமபாகு கருணாரட்ன அடையாள அட்டைக்குப் பதிலாக தனது முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்குரிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்துள்ளார். ஆனால் அதனை ஏற்பதற்கு வாக்களிப்பு நிலைய அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இந்நிலையில் வாக்களிப்பு நிலையத்தைவிட்டு வெளியேறிய விக்கிரமபாகு கருணாரட்ன தொலைபேசி ஊடாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திசாநாயக்கவுடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

அதனையடுத்து விக்கிரமபாகு கருணாரட்ன தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் விடேச அனுமதியுடன் குறித்த வாக்களிப்பு நிலையத்துக்கு மீண்டும் சென்று வாக்களித்துள்ளார். (2-6)

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இதில் பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை இ[illegible] தோற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இட[illegible] பெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியா[illegible] தமிழருக்கு நன்மை இல்லை

### இந்திய எழுத்தாளர் வ.ஐ.ச செயபா[illegible]

(கொழும்பு)

ராஜபக்ஷவின் வெற்றியால் தமிழருக்கு நன்மை இல்[illegible] என்று இந்திய எழுத்தாளர் வ.ஐ.ச. செயபாலன் கூறியுள்ளா[illegible]

ராஜபக்ஷ வெற்றி குறித்து எழுத்தாளர் வ. ஐ.ச. செயபாலன் கூறியுள்ளதாவது, இலங்கை அதிபர் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளர் ராஜபக்ஷ கூடிய வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார்.

இத் தேர்தலில் முறைகேடு நடந்துள்ளது. மறுதேர்தல் நடத்த இந்தியா வலியுறுத்த வேண்டும். இவரின் வெற்றியால் தமிழருக்கு நன்மை எதுவும் இல்லை என்று மேலும் கூறியுள்ளார். (2-6)

## சத் சித் ஆனந்தமானவரே பகவான் பாபா

இன்றைய காலத்தில் பள்ளி செல்லும் சிறு மாணவர்களில் இருந்து பெரியவர்கள் வரை ஒவ்வொவருக்கும் சூரியன், நிலவு , விண்மீன்கள் இவைகள் அனைத்திற்கும் அறுதியாகத் தோன்றும் ஆகாயம் அனைத்தும் தெரியும். ஆனால் பொருள் அகராதி முழுவதையும் அறிந்த அறிஞனுக்கு கூட "நான் யார்?" " நான் என்பது எது?" என்ற கேள்விக்கு விடை தெரியாது.

"நான்" எனும் சொல் தான் நம்மிடையே மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். உரையாடல்களின் போது திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்படும் சொல்லும் இதுவேயாகும். "நான் பார்த்தேன், 'நான் விமானி, நான் வெறுக்கிறேன் நான் கோபமாக இருக்கிறேன், நான் உயரமானவன்" இத்தனை இயல்புகளையும் , இவைகள் அனைத்தையும் பெற்றிருக்கும் இந்த "நான் யார்?" நான் என்பது தனி மனிதன் அல்ல என்று நூல்கள் கூறுகின்றன. தான் வசிக்கும் , இயக்கும் இந்த மனித உடலுக்குள் அடக்கப்பட்டதல்ல அது. அது பிரபஞ் சம் முழுவதும் வியா பித்துள்ள ஒன்றாகும். அது நிலையானது,பூரணத்துவமிக்கது. அதுவே பரமாத்மா, சர்வ வியாபகமானது "சத் சித் ஆனந்தம்" என்கிறார் பாபா.



இச் சத் சித் ஆனந்தத்தைப் பற்றியும் அவர் கூறுகையில் , "நான்" எனும் ஒவ்வொன்றும் நிறைவேற்றிக்கொள்ள விரும்பும் ஆசைகள் அல்லது தூண்டுதல்கள் அவை மூன்று வகைப்படும். நான் வாழ வேண்டும் என்பது - இது அமரத்துவத்தின் " சத் "தூண்டுதலாகும். நான் அறிந்து கொள்ள வேண்டும் என்பது – இது "சித்" எல்லாம் உணர்ந்த பரம் பொருளிலிருந்து சிதறிய பொறியாலான பூர்வ கால ஞாபகமாக வந்தது. நான் மகிழ்ச்சி யாக இருக்க வேண்டும் என்பது – இது ஆனந்தம் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் இயல்பான ஆனந்தத்திற்கு இது சான்றாகும் என்கிறார் பாபா.

ஜெய்சாயிராம் யாதவன்

# சுக வாழ்வுக்கான உணவு

விஞ்ஞானத் தகவல்களின்படி ஆரோக்கியத்திற்கான உணவு பின்வருமாறு அமைய வேண்டும்.

நன்கு தீட்டிய, பதனிடப்பட்ட, சக்தி செறிவான பொருட்களைக் கொண்டு உருவாகும் தின்பண்டங்களைக் கொண்டு உருவாகும் தின்பண்டங்கள், உணவுசார் நோய்களுக்கு ஏதுவாகின்றன. ஆனால் அதிக நார்ப் பொருள் கொண்ட இயற்கை உணவுகள் ஆரோக்கியமானவை.

சக்தி செறிவான வேக உணவுகளை உண்ணவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் அதைப் பல சிறுபாகங்களாக உண்பது பாதுகாப்பானது. ஆனால் மொத்தமாக உணவின் அளவு பரிந்துரைக்கப்பட்ட சக்தி அளவுக்கு மேற்படாதிருக்கவேண்டும்.

உணவு வேளையில் உண்பதைத் தவிர்ப்பது அல்லது ஒழுங்கற்ற உண்ணல் உகந்ததல்ல. இடையே விரதமிருப்பதில் சில நன்மைகள் இருப்பதாகச் சில ஆய் வுகள் காட்டினாலும், விரத வேளையில் சக்தி செலவாகும்,செயற்பாடுகளில் ஈடுபடுதல் பாதிப்பை ஏற்படுத்தும்.

காலை உணவைத் தவிர்ப்பது உடற் பாதிப்பை மட்டுமல்லாது, உளச் செயற்பாடுகளிலும், கற்றலிலும் பின்னடைவை ஏற்படுத்தும்.

உப்பில்லா உணவை உண்பதைவிடக் குறை உப்பும் அதிக பொட்டாசியமும் கொண்ட உணவை உண்பது ஆரோக்கியமானது. சுவையானது, மகிழ்வானது.

உணவில் இழையங்கள் ஒட்சியேற்றப்படுவதைத் தடுக்கக் கூடிய தாழ்த்தும் பொருட்கள் இருப்பது உகந்தது.

உடலுக்குத் தேவையான காபோவைதரேற்றுக்கள், நிரம்பிய மற்றும் நிரம்பாக் கொழுப்பு அமிலங்கள், கனியுப்புக்கள், நார்ப் பொருள் கொண்ட சமவிகித உணவை ஒவ்வொரு தடவையும் அளந்து உண்ணமுடியாது. பல்வேறு உணவு வகைகளை மாறி மாறி உண்பது தேவையான சத்துக்களை எளிதில் பெற உதவுவதோடு, ஒவ்வொரு தடவையும் புதிய உணவை உண்பது போன்ற மகிழ்வையும் தரும்.

உட்கொள்ளும் உயிர்ச் சத்து டி அல் ...லது சூரிய ஒளி தரும் உயிர்ச்சத்து டி தேவை ...யான அளவில் கிடைக்க வேண்டும். அண் ...மைக்காலம் வரை டி உயிர்ச்சத்து எலும்பு ...ன் மட்டுமே தொடர்புடையதாக கருதப்பட் ...டது. இப்போது பல இழையங்களின் ஆரோக் ...கியமான செயற்பாட்டிற்கு இது அவசியம் என ...றியப்பட்டுள்ளது. இவ் உயிர்ச்சத்து ...தியளவு கிடைக்காவிட்டால் நுரையீரல் ...ய்கள், இதய நோய்கள், தொற்று நோய்கள், ... நோய்கள் உட்பட பல நோய்கள் இல ...யில் ஏற்படலாம் என நம்பப்படுகின்றது.

எமக்கு இலகுவாக அதிக அளவில் கிடைக்கும் சூரிய ஒளி எமது தோலில் படும் போது இவ் உயிர்ச்சத்து உருவாக்கப்படுகிறது. ஆனால் உடல் முழுவதையும் ஆடையால் மூடியும், வெயிலில் விளையாடுவதை தடுத்தும், எமது பிள்ளைகளுக்கு இவ் உயிர்ச்சத்து கிடைப்பதைத் தடுப்பதுடன் பெரியவர்களும் உள்ள வேலைகளை சூரிய ஒளி புகாது குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து செய்வதுடன், வாகனங்களையும் பயன்படுத்துவதனால் இவ் உயிர்ச்சத்தை போதிய அளவு பெற்றுக் கொள்ளலாம். நோய் வாய்ப்படக்கூடிய நிலை உருவாகி வருகிறது.

இரப்பை வெறுமையாக இருக்கும் போது கேர்லின் என்னும் ஓமோன் இரப்பையால் சுரக்கப்படுவதாகவும் அது பசியைத் தூண்டுவதாகவும் கொழுப்புப் பொருளை உடல் பயன்படுத்துவதைக் குறைப்பதாகவும் அண்மைக்கால ஆய்வுகள் காட்டியுள்ளன. ஒழுங்காக உண்ணாதவிடத்து இந்த ஓமோன் அதிகரித்து உண்ணலை அதிகரிக்கச் செய்வதாகக் கருதப்படுகின்றது.

கவர்ச்சியான ருசியான உணவுப்பண்டங்கள் கண் முன்னே இருக்கும் போது உண்பதற்கான தூண்டல் பசியாகவோ, உடல் தேவையாகவோ இருப்பதில்லை. உண்பதன் மகிழ்ச்சியே காரணமாகின்றது. மனித உடல் இத்தகைய செயற்கையான உணவுகளை உடலில் தேவைக்கேற்ப கட்டுப்படுத்தும் ஆற்றலை கொண்டிருக்கவில்லை.

இறுதியாக அதிக உணவு இரப்பையினுள் இரப்பையினுள் திணிக்கும் போது இரப்பை பெருத்து மேலதிகமாக உண்பதற்கு காரணமாகிறது. சிறிதளவு உண்பவரின் இரப்பை சிறிதாகிவிடுகிறது.

### காலை உணவைத் தவிர்த்தல்

காலை உணவை தவிர்ப்பவர்களில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி பல ஆய்வாளர்கள் ஆராய்ந்துள்ளனர். இவ் ஆராய்ச்சிகளின் முடிவுகள் பின்வருமாறு ,

காலை உணவைத் தவிர்ப்பவர்களின் குருதியில் கொலஸ்ரோல் அதிகரித்து ஆரோக்கியமற்ற தன்மையைக்கொண்டுள்ளது.

உடல் நிறையைக்குறைப்பதற்கான உணவைக் குறைப்பவர் காலை உணவை் வழமைபோல் உண்டு மதியம் மற்றும் இரவில் குறைவாக உண்பது நல்ல பலனைத் தந்துள்ளது. குறைவான உணவை பல பாகங்களாக உண்பவரும் காலையில் கட்டாயமாக உண்பது சிறந்த பலனைத் தரும்.

காலை உணவை உண்ணும் சிறுவர்



மற்றும் கட்டிளம் பருவத்தினரின் போசாக்கு நிலை அதைத்தவிர்ப்பவரை விட மேம்பட்டுக்காணப்பட்டது.

போதிய உணவு கிடைக்காதவர் கிடைக்கும் உணவை காலையில் உண்பது கல்வி மேம்பாட்டைக்கொடுத்துள்ளது.

காலை உணவு மாணவரிடையே உள்வாங்கும் திறன் , பரீட்சை பெறுபேறுகள் , பாடசாலை வரவு , ஞாபகசக்தி மற்றும் போசனை நிலை என்பவற்றில் மேம்பாட்டை காட்டியுள்ளது.

### உணவு நோயாதல்

உணவினால் நோய்கள் உருவாகும் விதம் விஞ்ஞான ரீதியாக தெளிவாக்கப்படவில்லை. இது புள்ளிவிபர அடிப்படையில் காணப்பட்ட தொடர்பாகவே உள்ளது. இதற்கான சில கருத்தியல் விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உணவினால் புற்றுநோய் உருவாவதற்கு உணவு பதனிடலில் சேர்க்கப்படும் இரசாயனப்பதார்த்தங்கள் உள்ளெடுக்கப்பட்ட பின் புற்றுநோய் காரணிகளாக மாறுவது ஒரு காரணமாகும். ஒருவகையான பங்கசு புற்றுநோய் உருவாக்கும் நச்சுப்பதார்த்தத்தைச் சுரக்கின்றது. அத்தகைய பங்கசு (பூஞ்சணம்) தொற்றிய உணவுகளால் புற்று நோய் ஏற்படுகிறது. மேலும் நார்பொருள் இல்லாத உணவு உண்பவரது குடலில் மிகச் சிறிய அளவு கழிவுகளே எஞ்சுவதால் குடல் மிக மெதுவாக அசைவதுடன் குடலினுள் மலம் நீண்ட நேரம் தங்குகின்றது.(மலச்சிக்கல்) குடலினுள் இயற்கையாகக் காணப் படும் பக்ரீயாக்கள் பித்த அமிலங்களைச் சிதைக்கும் போது உருவாகும் சில பதார்த்தங்கள் குடற் புற்று நோயை ஏற்படுத்தவல்லன.

அத்திரோஸ்கிளிரோசிஸ் எனப்படும் நாடிகளில் ஏற்படும் மாற்றம் குருதி வழங்கலைப் பாவிப்பதால் இருதயம் , மூளை போன்ற பல உறுப்புகளின் செயற்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நாடிகளின் அகப்படையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக அப்படையில் கொழுப்புப் பொருட்கள் படிவதுடன் ஆரம்பிக்கும் இம்மாற்றம் மூன்று வகைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

படியும் கொழுப்புப் பொருளால் குழாய்களில் உள் விட்டம் குறைவது.

படிந்த கொழுப்புப் பொருளில் கல்சியம் சேர்ந்து இறுகி குழாயை விரிவடைய முடியாது செய்வது மற்றும் கொழுப்புப் படிந்த இடங்களில் குழாயின் அகப்படை பாதிக்கப்பட்டு குருதி உறைதலுக்கு காரணமாகி குழாயை முற்றாக மூடச் செய்தல் மேற்படி மாற்றங்கள் ஏற்படும் உறுப்பு மாற்றத்தின் அளவு என்பவற்றின் விளைவாக மாரடைப்பு , பாரிசவாதம் , உயர் குருதி அமுக்கம் போன்றவை ஏற்படுகின்றன. அத்திரோஸ் கிளிரோஸின் ஏற்படுவதற்கான அடிப்படைக்காரணி குருதியில் புரதத்துடன் இணைந்து காணப்படும். கொழுப்பு (Lipoprotein) அளவு மாறு வதே உயிர் இரசாயனவியல் அடிப்படையில் இது குறை அடர்த்தி , இடை அடர்த்தி மற்றும் அதி அடர்த்தி (LDL,IDL,HDL) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு எல்லாவற்றிலும் கொலஸ்ரோல் ஒரு பகுதியாக காணப்படுகின்றது.

முதல் இருவகை அதிகரிப்பதும் மூன்றாவது வகை குறைவதும் அத்திரோஸ் கிளிரோஸில் ஏற்பட காரணமாக அறியப்பட்டுள்ளது.

இன்சுலின் , கோட்டிசோல் (அழுத்த ஓமோன்) இன்னும் பல ஓமோன்களின் சுரப்புக்களிலும் செயற்பாட்டிலும் மாற்றத்துக்குள்ளாகும் அனுசேபத்தின் விளைவாகவும் மேற்படி நோய் நிலை ஏற்படலாம்.

இந்த ஓமோன்கள் குருதியில் குளுக்கோஸ் , கொழுப்புப் பொருள் போன்றவற்றையும் அவற்றை இழையங்கள் பயன்படுத்தும் தன்மையையும் மாற்றவல்லன.

இந்த ஓமோன்களின் 24 மணி நேர மொத்த சுரப்பு மற்றும் கூடுதியாக ஏற்படும் சுரப்பு மாற்றங்கள் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தவல்லன.

### நீண்ட கால நோய்களுக்கு உணவுடனான தொடர்பு

நீண்ட கால நோய்களுக்கு ஆளாகும் தன்மை முப்பது வீதம் பரம்பரை காரணிகளிலும், மிகுதி உணவு மற்றும் சூழல் என்பவற்றிலும் தங்கியுள்ளது.

இந்த நோய்களின்ஏதுநிலை கருவறையிலேயே ஆரம்பமாகி விடுகின்றது. இவற்றை தவிர்ப்பதற்கான முயற்சிகள் வாழ்வில் எல்லாப் பருவங்களிலும் மேற்கொள்ளப் படவேண்டும்.

பிறப்பு , நிறை குறைவாய் இருத்தல், உடல், உள குறைபாடுகளுடன் தொடர்புடையது.

அதிக பிறப்பு நிறை, அதிக உடற்பருமனுடன் அது சார்ந்த நோய்களுடன் தொடர்புடையது.

குருதிச்சுற்றோட்ட நோய்களுக்கு உணவின் சக்திப் பெறுமானத்தின் 10 வீதத்திற்கு மேலாக நிரம்பிய கொழுப்பு உட்கொள்வதுடன் தொடர்புள்ளது. நிரம்பாத கொழுப்புக்களை ஐதரசன் நேற்றி நிரப்பியதாக்கும் போது உருவாகும் கொழுப்புக்கள் (உதாரணமாக சில மாஜரின்களின் தயாரிப்பில்) அதிக ஆபத்தானவை. நிரம்பாத கொழுப்புக்கள் உடலில் நன்னிலைக்கு மிக அவசியமானவை. ஆனால் அதிக நிரம்பாத கொழுப்புக்களை உட்கொள்வதும் நல்லதல்ல .

உணவில் நார்ப்பொருள் அதிகம் இருப்பது நோய்களுக்கான ஏதுநிலையை குறைக்கின்றது.

தினசரி 5 கிராமுக்கு குறைவாக உப்பு உண்பது உயர் குருதி அமுக்க ஏது நிலையைக்குறைக்கிறது.

சலரோகம் அதிக கொழுப்பு உண்பதுடன் குருதியில் குளுக்கோஸ் அளவை விரைந்து கூட்டும் உணவுகளுடன் தொடர்புபட்டுள்ளது.

### உயர் குருதி அமுக்கமும் உப்பும்

உயர் குருதி அமுக்கம் உள்ளவரில் 95 வீதமானவருக்கு இனம் காணக்கூடிய காரணம் இருப்பதில்லை. இவர்களின் குருதி அமுக்கம் கூடியதற்கு காரணம் உடற் செயற்பாட்டிற்கும் , குறிப்பாக சிறுநீரக செயற்பாட்டிற்கும் ,சூழல் காரணிகளுக்கும் இடையே ஏற்படும் குழப்ப நிலையே என கருதப்படுகின்றது. நெடுங்காலமாக இதற்கு கறி உப்பு (சோடியம்) அதிக அளவில் உண்பது ஒரு முக்கிய காரணம் என கருதப்பட்டது. அண்மைக்கால ஆய்வுகள் அதிக உப்பு மட்டும் காரணம் அல்ல என்றும் பொட்டாசியம் குறைவாக இருப்பதும் சேர்ந்தே குருதியமுக்கத்தைக் கூட்டுவதாக எடுத்துக் காட்டியுள்ளன.

இயற்கையில் கிடைக்கும் உணவுகள்– காய் கனிகள்– அதிக பொட்டாசியத்தையும் மிகச் சிறிய அளவில் மட்டும் சோடியத்தையும் கொண்டிருப்பதாகவும் இத்தகைய உணவை உண்பவரிடையே உயர் குருதி அமுக்கம் ஏற்படுவில்லை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. நவீன உணவு பதனிடல்களில் அவற்றை பழுதாகாமல் சந்தைப்படுத்த அதிக கறி உப்பு சேர்க்கப்படுகின்றது.

உதாரணமாக பொதி செய்யப்பட்ட 60 கிராம் இறைச்சி 2 கிராம் உப்பையும் தகரத்தில் அடைக்கப்பட்ட கோழி சூப் ,3 கிராம் உப்பையும் கொண்டிருக்கும். இவற்றில் பொட்டாசியம் புறக்கணிக்கத்தக்க அளவிலேயே உள்ளது. மாறாக ஒரு கோப்பை அவித்த பருப்பில் பெருமளவு பொட்டாசியமும் மிகச் சிறிய அளவு உப்பும் காணப்படும்.

மேலும் பழங்களும் ,காய்கறிகளும் பெருமளவு பொட்டாசியத்தையும் சிறிதளவு உப்பையுமே கொண்டிருக்கும். காய்கறி எனும் போது மரவள்ளி , உருளை போன்ற கிழங்கு வகைகளை கருதக்கூடாது. அவை தானியங்கள் போன்று பெரும் உணவு பொருட்களாகும்.

இயற்கை உணவுகளை உடனுக்குடன் சமைத்து உண்ணும் மக்களின் உள்ளெடுக்கும் பொட்டாசியத்திற்கு சோடியம் (உப்பு) வீதம் 3–10 வரை காணப்பட, பதனிடப்பட்ட உணவுகளை உட்கொள்பவரின் பொட்டாசியத்திற்கு சோடியம் ( உப்பு) வீதம் 0.4 இலும் குறைவாகவே உள்ளது. அதாவது பொட்டாசியத்தை விட பல மடங்கு அதிக சோடியத்தை உள்ளெடுக்கின்றன.

மனித சிறுநீரகம் ,சோடியத்தை சேமிப்பதும் பொட்டாசியத்தை வெளியேற்றவும் இசைவாக்கப்பட்டுள்ளது. இது மனித இனம் தோன்றிய காலத்தில் இருந்து உட்கொண்ட உணவுக்கு பொருத்தமாக இருந்துள்ளது. நவீன உணவுப் பதனிடலிலும் உணவுத் தெரிவும் பொட்டாசியத்திற்கு சோடியம் ( உப்பு) வீதத்தை மாற்றி விட்ட நிலையில் சிறு நீரகத்தின் செயற்

பேராசிரியர் க. சிவபாலன்

பாடு மாற்றமடையாது இருப்பது உயர் குருதி அமுக்கத்திற்கு காரணமாகின்றது. பழங்கள் , இலை வகை ,காய்கறிகள் , பருப்புக்கள் போன்றவை உண்ணப்படும் போது அதிக பொட்டாசியம் கிடைப்பதால் குருதி அமுக்கம் சீராகிறது.

### உணவில் சுவையூட்டிகளின் பங்கு

எமது உடலின் செயற்பாடுகளின் போது தவிர்க்க முடியாமல் உருவாகும் சில ஒட்சியேற்றும் பொருட்களில் தாக்கத்தால் இழையங்கள் சிதைவடைந்து நோய்களாவதோடு வயோதிபத்திற்கும் காரணமாக அமைவதாகத் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். உணவுடன் உண்ணப்படும் உயிர்ச்சத்து சி போன்ற தாழ்த்தும் பொருட்கள் மேற்படி தாக்கத்தில் இருந்து பாதுகாப்பதாகவும், புளி போன்ற இயற்கைச் சுவையூட்டிகளின் இத்தகைய இயல்பு காணப்படுவதால் அவை ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்றும் அவ் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ✦

# சகீர்கானின் வேகத்தில் சுருண்டது பங்களாதேஷ்; தொடரை முழுமையாக சுவீகரித்தது இந்தியா



(மிர்பூர்)

சகீர்கானின் துல்லியமான பந்து வீச்சு கைகொடுக்க இந்திய அணி 10விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி டெஸ் தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றியது.

பங்களாதேஷிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய அணி 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 24ஆம் திகதி மிர்பூரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 233 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 8விக்கெட்டுக்களையிழந்து 544ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 311ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 3விக்கெட்டுக்களையிழந்து 228ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் நான்காம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு சகாடாட் ஹுசைன்– அஷ்ரபுல் ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 68 ஓட்டங்களை எடுத்து பங்களாதேஷ் அணி 290 ஓட்டங்களை எட்டியது.

எனினும் சகீர்கான், ஓஜாவின் சிறப்பான பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில்



312ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் தமீம் இக்பால் 151ஓட்டங்களையும், ஜீனைட்டட் சிட்டிக் 55 ஓட்டங்களையும், சகாபாட் ஹீசைன் 40, மொகமட் அஸ்ரபுல் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான் 20.3ஓவர்கள் பந்துவீசி 2ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 87ஓட்டங்களைக் கொடுத்து 7விக்கெட்டுக்களையும், பிரக்ஜன் ஓஜா 2விக்கெட்டுக்களையும், ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இதன் மூலம் இரண்டாவது இன்னிங்ஸில் 2ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி விக்கெட்டிழப்பின்றி 2ஓட்டங்களை எடுத்து 10விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி 2போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2:0என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.

இப் போட்டியில் 10விக்கெட்டுக்களை (முதல் இன்னிங்ஸில் 7, இரண்டாவது இன்னிங்ஸில் 3)சாய்த்து இந்திய அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த சகீர்கான் ஆட்ட நாயகனாக தெரிவானதுடன் தொடர்நாயகன் விருதையும் வென்றார்.

**சச்சினுக்கு சிறப்பு விருது**

இத் தொடரில் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட்கிரிக்கெட் அரங்கில் தனது 13ஆயிரம் ஓட்டங் களைக் கடந்து சாதனை படைத்தமையை கௌர விக்கு விதமாக அவருக்கு நேற்று சிறப்பு விருது வழங்கப்பட்டது.

## ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் முடிவுகள்

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 6,015,934 | 57.88 |
| சரத் பொன்சேகா | 4,173,185 | 40.15 |
| முகமட் ஸ்மைல் | 39,226 | 0.38 |
| அசோக சுரவீர | 26,266 | 0.25 |
| சுகத்சிறி கமகே | 23,290 | 0.22 |
| மகிமன் ரஞ்சித் | 18,747 | 0.18 |
| அனுர லியனகே | 14,220 | 0.14 |
| சரத் மனமென்ர | 9,684 | 0.09 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 9,662 | 0.09 |
| யூ.விஜயகோன் | 9,381 | 0.09 |
| லால் பெரேரா | 9,353 | 0.09 |
| சிறிதுங்க ஜயசூரிய | 8,352 | 0.08 |
| விக்கிரமபாகு கருணாரட்ண | 7,055 | 0.07 |
| முகமட் இலியாஸ் | 6,131 | 0.06 |
| விஜே டயஸ் | 4,195 | 0.04 |
| சனத் பின்னடுவ | 3,523 | 0.03 |
| முகமட் முஸ்தபா | 3,134 | 0.03 |
| சீலரத்ன தேரர் | 2,770 | 0.03 |
| சேனாரத்ன டி சில்வா | 2,620 | 0.03 |
| அருண டி சொய்சா | 2,618 | 0.03 |
| உபில் சரத் கொங்ககே | 2,260 | 0.02 |
| முத்துபண்டார தெமினிமுல்ல | 2,007 | 0.02 |
| **செல்லுபடியான வாக்குகள்** | 10,393,613 | 99.03 |
| **நிராகரிக்கப்பட்டவை** | 101,838 | 0.97 |
| **வாக்களிக்கப்பட்டவை** | 10,495,451 | 0.74 |
| **பதிவு செய்யப்பட்டவை** | 14,088,500 | |

**தம்புள்ள மாவட்டம்**

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 146, 912 | 47.92 |
| சரத் பொன்சேகா | 153, 105 | 49.94 |
| ஏனையவர்கள் | 6,545 | 2.14 |
| **செல்லுபடியான வாக்குகள்** | 306,562 | 99.06 |
| **நிராகரிக்கப்பட்டவை** | 2,912 | 0.94 |
| **வாக்களிக்கப்பட்டவை** | 309,474 | 73.54 |
| **பதிவு செய்யப்பட்டவை** | 420,835 | |

**கம்பஹா**

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 718,716 | 61.66 |
| சரத் பொன்சேகா | 434,506 | 37.28 |
| ஏனையவர்கள் | 12,426 | 1.06 |
| **செல்லுபடியான வாக்குகள்** | 1,165,648 | 99.24 |
| **நிராகரிக்கப்பட்டவை** | 8,960 | 0.76 |
| **வாக்களிக்கப்பட்டவை** | 1,174,608 | 79.66 |
| **பதிவு செய்யப்பட்டவை** | 1,474,464 | |

**யாழ்.மாவட்டம் (நல்லூர்)**

| வேட்பாளர்கள் | பெறப்பட்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 3,554 | 21.68 |
| சரத் பொன்சேகா | 11,543 | 70.42 |
| ஏனையவர்கள் | 1,294 | 7.90 |
| **செல்லுபடியான வாக்குகள்** | 16,391 | 96.71 |
| **நிராகரிக்கப்பட்டவை** | 557 | 3.29 |
| **வாக்களிக்கப்பட்டவை** | 16,948 | 23.36 |
| **பதிவு செய்யப்பட்டவை** | 72,558 | |

# தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் திடீர் விலகல்

(கிழக்கு லண்டன்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தர், திடீரென தனது பதவியை ராஜினாமா செய்துள் ளார். இதையடுத்து இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு தற்காலிக பயிற்சியாளராக வேனர் ஜில் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராக கடந்த 2005ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர் மிக்கி ஆர்தர். 2ஆண்டு பதவிக் காலம் முடிந்தும், பலமுறை இவருக்கு பதவி நீடிப்பு செய்யப்பட்டது. இவர் தலைமையில் பல வெற்றிகளை பெற்ற போதும், சமீபத்தில் சொந்த மண்ணில் நடந்த மினி உலக கோப்பை தொடரில் தென்னாபிரிக்க அணி, அரையிறு திக்கு கூட முன்னேறவில்லை.

தவிர இங்கிலாந்துக்கு எதிராக ஒரு நாள் தொடரை இழந்தது, டெஸ்ட் தொடரை சமனிலை செய்தது போன்றவை இவரை அதிகம் பாதித்து விட்டது. எதிர்வரும் 2012ஆம் ஆண்டுவரை பயிற்சியாளராக தொடர இருந்த இவர், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித் தலைவர் ஜெரால்ட் மஜோலாவைசந்தித்தபின் திடீரென பயற்சியாளர் பதவியை ராஜினாமா செய்தார்.

இது குறித்து ஆர்தர் கூறியதாவது,

எனது பயிற்சி காலத்தில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளை அதன் சொந்த மண்ணில்வீழ்த்தியது பெருமையாக உள்ளது.


யாழ். மக்கள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க
வலம்புரியின்

திருமண தரிசனம்

உங்கள் வலம்புரியில் ஞாயிறு தோறும் வெளிவரும்.
எங்கள் உறவுகளின் வெளிநாட்டு தொடர்புக்காக
இணையத்தளத்திலும் திருமண தரிசனம் வெளிவரும்.

அன்பார்ந்த பெற்றோர்களே! உங்கள் பொறுப்பை இலகுவாக்க
வலம்புரியின் சேவையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



தொடர்பு:
நேரில்
இல. 3,2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



# முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள் அறிக்கை சமர்ப்பித்து சம்பளம் பெறலாம்

(திருகோணமலை)

முல்லைத்தீவு கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது யாழ்.மாவட்ட பாடசாலை களில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் தமது அறிக்கைகளை சமர்ப்பித்து வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத் தில் இயங்கும் தமது வல யக் கல்வி அலுவலகத்தில் சம்பளத் தைப் பெற்றுக் கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது.

அறிவித்தலை வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

முல்லைத்தீவு கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது யாழ்.மாவட்ட பாடசாலைகளில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள்,வவுனியா மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலு வலகத்தில் இயங்கும் முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகத்தில் தமது அறிக்கையை சமர்ப்பித்து சம்பளத் தை பெற்றுக் கொள்ளவும் இவ்வாறான நடைமுறையே வவுனியா வடக்கு ,மடு, கிளிநொச்சி மற்றும் துணுக்காய் வலயக் கல்வி வலய பாடசாலை ஆசிரியர்களுக்கு பின்பற்றப்படுகிறது.

எனவே மேற்படி விடயம் தொடர்பில் தமது பாடசாலைகளில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கி சம்பளத்தை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்களையும் கேட்டுக் கொள்கின்றேன். இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார். (ச-5)

# யாழ். குடாநாட்டில் பொலிஸ் சோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அசம்பாவிதங்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பொலிஸார் இரவு நேரங்களிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மாரப்பன தெரிவித்தார்.

தேர்தல் தினத்தன்று அதிகாலை யாழ்ப்பாணத்தில் சிற்சில அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் அசம் பாவிதங்கள் இடம் பெற்றால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பொன்சேகா தங்கியிருந்த ஹோட்டலினுள் கொமாண்டோ அணி உள்நுழைந்தது

## உல்லாசப்பயணிகள் வெளியேற்றம்

(கொழும்பு)

பொது வேட்பாளர் சரத் பொன்சேகா தங்கியிருக்கும் ட்ரான்ஸ் ஏசியா ஹோட்டலினுள் தற்போது விசேட கொமாண்போக்கள் நுழைந்துள்ளார்கள் என்றும் அவர்கள் பொன்சேகாவை விசாரணை செய்ய உள்ளனர் என்றும் எதிர்க்கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று அதிகாலை முதல் ஹோட்டலை சுற்றிவளைத்திருந்த கொமாண்போக்கள் மற்றும் பொலிஸார் பொன்சேகாவை கைது செய்வதற்கு ஹோட்டலினுள் நுழைய முயற் சித்தார்கள் என்றும் அவர்களை பொன்சேகாவின் பாதுகாப்பு பிரிவினர் தடுத்து நிறுத்தினர் என்றும் முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அத்துடன் தன்னைக் கைது செய்வதற்கும், கொலை செய்வதற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளதாக சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் ஹோட்டலுக்கு நுழைந்த கொமாண்போக்கள் அங்கு தங்கியிருந்த உல்லாசப் பயணிகள் மற்றும் வெளிநாட்டவர்களை அங்கிருந்து வெளியேற்றினர். (ச-5)

# ஜனாதிபதியாக மகிந்த வருவதற்கு...

இது தொடர்பில் அவர் லண்டன் பி.பி.சிக்கு வழங்கிய நேர்காணலில்,

ஜனாதிபதி மகிந்த பெற்றுக் கொண்ட வெற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலோ அல்லது தமிழ் மக்களினாலோ பெற்றது அல்ல.

அவர் வேறு விதமாக அதாவது வடக்குக் கிழக்கு வெளியே பெரும்பான்மை சிங்கள மக்களினால் கொடுக்கப்பட்ட வாக்கின் மூலமே வெற்றி பெற்றுள்ளார்.

நாம் வட கிழக்கில் மட்டும் தான் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளோம் நாங்கள் எவருடனும் கூட்டுச் சேரவில்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் பேசும் மக்களின் ஆதரவைத்தான் கோரிநின்றது என்றார்.

நாங்கள் ஆட்சிக்கு வரும் எந்த அரசுடனும் பேசத் தயாராகி இருக்கின்றோம். இது தொடர்பில் எமக்கு எந்தவிதமானபிரச்சினையும் இல்லை நாம் அடிபணியத்தயாராக இல்லை.

எமது மக்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுக்கவும் தயாராக வில்லை. எமது பிரதேசத்தை எமது மக்களை எமது கலை, கலாசாரங்களை, பாதுகாத்து கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றினையே எதிர் பார்க்கின்றோம். அந்த தீர்வு சரியான முறையில் நடை முறைப்படுத்த வேண்டும். இதற்கு நாம் எப் போதும் யாருடனும் ஒன்றிணைந்து செயற்பட தயாராகவுள்ளோம் என்றார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் மீண்டும் ஒருமுறை ஜனாதிபதியாக வருவதற்கு ஒரு ஆணையை தருமாறு கேட்டிருந்தார். கடந்த தேர்தலில் அனைத்து மக்களும் வாக்களிக்கவில்லை. குறிப்பாக வடகிழக்கு தமிழ் மக்கள் வாக்களிக்கவில்லை. அதனால் அனைத்து மக்களிடம் மீண்டும் ஜனாதிபதியாகுவதற்கு ஆணை வழங்குமாறு கேட்டிருந்தார். இந்த கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

எமது மக்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த ஆணையை நாம் அவருக்கு வழங்க முடியாது என்பதை மக்கள் மீண் டும் நிரூப்பித்துள்ளனர்.. என்றும் சம்பந்தன் கூறினார். (ச-5)

# விடுதியிலிருந்து பொன்...

விடுதியில் இருந்து வெளியேறிய பொன்சேகா தனது இல்லத்தை நோக்கி சென்றதாக அவரின் உதவியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவுமுதல் கடுமையான இராணுவ முற்றுகைக்குள் விடுதியில் பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

எனினும் விடுதியை விட்டு வெளியேறிய பொன்சேகாவின் வாகனத்தை படையினர் சோதனையிட முயன்றதாகவும் ஆனால் பின்னர் அவர்கள் அந்த முயற்சியைகை விட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# அரச படைகள் ஆயுதங்களை பயன்...

மக்களின் சுயாதீனமான வாக்களிப்பு முறை சீரழிக்கப்பட்டுள்ளது. எம்மிடம் இருந்து வெற்றி பறித்தெடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன. தேர்தலில் ஆணையாளருக்கு முறைப்பாடு அனுப்பியுள்ளோம். அரச ஊடகங்களை முறைகேடாக பயன்படுத்தி, அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்து, பெருமளவில் வாக்கு மோசடிகள் மேற்கொள்ளப்பட்டே இந்த தேர்தல் வெல்லப்பட்டுள்ளது.

எனது பாதுகாப்புக்களை குறைந்த பின்னர் என்னை படுகொலை செய்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. எனக்கு பாதுகாப்பு வழங்கிய உந்துருளிப் படையணியை சேர்ந்த 10 பேரை அரசு கைது செய்துள்ளது.

அவர்களின் கைகளில் விலங்கிடப்பட்டு வெயிலில் முழுங்காலில் நிறுத்திவைக்கப்பட்ட பின்னர் அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

உயர் நீதி மன்றத்தால் எனக்கு வழங்கப்பட்ட 70 பாதுகாப்பு அதிகாரிகளையும் நீக்குவதற்கு முயன்று வருகின்றது. என்னை நிராயுதபாணியாக்கிய பின்னர் கொல்லப் போகின்றனர்.

இதுசெய் அல்லது செத்துமடி என்ற நிலைமை. நான் போரிட வேண்டும். அல்லது சரணடைய வேண்டும். இவற்றுள் ஒன்று நிகழப் போகின்றது.

எனது விடுதியை சுற்றி ஆயிரம் இராணு வத்தினரும், 500 பொலிஸாரும் உள்ளனர். நான் இராணுவத்தளபதியாக இருந்ததால் எனக்கு இந்த படைக்குவிப்பின் உள்நோக்கம் தெரியும்.

எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது நான் தங்கியுள்ள ஹோட்டலுக்குள் பலவந்தமாக இராணுவத்தினர் உட்புக முயற் சிக் கின்றனர். எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலகமும் பொறுப்புக்கூறவேண் டும் என அவர் மேலும் கூறினார். (ச-5)

# 58 வீதமான வாக்குகளைப்பெற்று...

நடைபெற்று முடிந்த ஆறாவது ஜனாதிபதித் தேர்தலில் தற்போது ஜனாதிபதியாகவுள்ள மகிந்த ராஜபக்ஷ எதிரணி வேட்பாளர் சரத் பொன்சேகாவைவிட 18 இலட்சத்து 42 ஆயிரத்து 749 மேலதிக வாக்குகள் பெற்று வெற்றிபெற்றுள்ளார்.

இதன்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 60 இலட்சத்து 15 ஆயிரத்து 934 வாக்குகளைப்பெற்றுள்ளதுடன் (57.88 வீதம்), ஜெனரல் சரத் பொன்சேகா 41 இலட்சத்து 73 ஆயிரத்து 185 வாக்குகளை (40.15 வீதம்) பெற்றுள்ளார்.

இதேவேளை நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்னர் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தல் என மகிந்த ராஜ பக்ஷ கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அவர் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

இலங்கை நாட்டை அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து மீளக்கட்டியெழுப்ப எமக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை நாம் அனைவருடன் ஒன்று கூடி சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவேன்.

எமதுமக்கள் சமூகம் அரசியல் ரீதியாக முதிர்ச்சிபெற்றுள்ளது என்பதையே நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் எடுத்துக்காட்டுகின்றது. இந்த தேர்தலில் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எனது கரருத்தை பலப்படுத்தி மீண்டும் இந்த நாட் டின் ஜனாதிபதியாக்கியுள்ளார்கள்.

நாட்டின் ஜனாதிபதியை தவிர அனைவரும் சட்டத்தின்முன் சமமாக காணப்படுகின்றனர். என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ச-5)

# பொன்சேகாவை கைது

செய்யப் போவதுமில்லை.

சரத் பொன்சேகாவுக்கு எங்கும் செல்வ தற்கு உரிமை உண்டு. அவர் விரும்பிய இடத்திற்கு விரும்பிய நேரத்தில் சென்று வரலாம் என்றார்.

எனினும் இச் சம்பவங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா சரத் பொன்சேகாவுடன் இருந்தவர்கள் அரசாங்கத்தினால் அவருக்குப் பாதுகாப்பு வழங்க நியமிக்கப்பட்டவர்கள் என்று கூறினார்.

இச் சம்பவங்களினால் கொழும்பில் ஒரு விதமான பதற்றமான சூழ்நிலை காணப்படு வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# அமெரிக்க...

ஆகியோரும் இராணுவத் தினரால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அஸ்கிரிய மகாநாயக்கர்கள் தேர்தலை இரத்துச்செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-5)

# உடனடியாக...

எதிர் கொள்ள நான் விரும்ப வில் லை.

உடனடியாகவே ஓய்வு பெறுவதற்கு நான் விரும்புகின்றேன். தேர்தலின் போது அரச ஊடகங்களும் அரச திணைங்களங்களின் தலைவர்களும் நடந்து கொண்ட முறை என்னை கடும் விசனத்திற்கு உள்ளாக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# வடக்கு-கிழக்கு...

106950, மகிந்த ராஜபக் ஷவுக்கு 41910 வாக்குகளும் கிடைத்துள்ளன. ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி தவிர ஏனைய தொகுதிகளில் சரத் பொன்சேகா வெற்றி பெற்றுள்ளார். (ச)


திறப்பு விழா அழைப்பு

நாளை (29.01.2010) வெள்ளிக்கிழமை காலை 9.30 தொடக்கம் 10.50 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் பருத்தித்துறையில் இயங்கி வந்த எமது **உதயா போட்டோ** பெயர் மாற்றம் செய்யப்பட்டு

சண் டிஜிற்றல் ஸ்ரூடியோ

என்ற புதிய பெயருடன் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்ட ஒளிப் படக் கலையகம் பஸ் நிலையம், பருத்தித்துறையில் ஆரம் பிக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



உதயன்
சண் டிஜிற்றல் ஸ்ரூடியோ
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.



TCN EXPRESS INTERNATIONAL

உள்நாட்டுக்கான பொதிகள் சேவையில் புதியதோர் அறிமுகம்

உள்நாட்டுக்கான கடிதங்கள் பொதிகள் அன்பளிப்புப் பொருட்கள் குறித்த இடத்தில் 24மணி நேரத்துக்குள் (சனி ,ஞாயிறு தவிர்ந்த) பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

Head Office
TCN EXPRESS
No.2B, Nelson Place,
Colombo - 06

திருமுருகன் கொம் நெற் T.P - 021 222 7835

259, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
பிரதான வீதி, நெல்லியடி.
Ananda Commnuication No,103.Railway Station Road, Vavuniya
EDGE TECHNO WORLD Tricomalle

(C-4348)



சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்:- 21 / 02 / 2010
நேரம்:- காலை 11 மணி
இடம்:- யாழ். மத்திய கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்

பொதுச் செயலாளர்.

(C-4346)


இப்பத்திரிகை வலம்புரி அன்.(கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.